# நறுந்தமிழ்

பன்னாட்டு ஆய்விதழ்

# International Journal of Narunthamizh


| தொகுதி 1 / பகுதி 3 | ஜூலை 2026 |
|---|---|
| Volume 1/ Issue 3 | July 2026 |

All's square Publication,
Madha Koil Street, periyapattu, Silambimangalam (po),
Bhuvanagiri Tk, Cuddalore Dt, Tamil Nadu 608801.

Volume: 01 Issue -03:
July  to September 2026

ISSN :
DOI :

# International Journal Of Narunthamizh Editorial office

## Office of the Editor – in – Chief

**No. 379 Madha Kovil Street periyappattu, Silambimangalam (po) buvanagiri Tk Cuddalore, Tamil Nadu, India.**

**Tel: 09786864409**

**Email: narunthamizh.com/webmail**

Website: www.narunthamizh.com/current-issues/

## Publisher

**All's square Publication,,**

**Madha Koil Street, periyapattu, Silambimangalam (po),**

**Bhuvanagiri Tk, Cuddalore Dt, Tamil Nadu 608801**

**Tamil Nadu, India.**

Volume: 01 Issue -03:
July  to September 2026

ISSN :
DOI :

# Editorial Board 2026 -2029

**Editor in Chife**

## Dr. A. Irudhayaraj

(Research Supervisor & Convener)

Assistant Professor, Department of Tamil, VISTAS, Chennai - 600117

Tamil Nadu, India.

irudhayaraj.sl@vistas.ac.in 9786864409.

https://erp.vistas.ac.in/evarsitypack/resources/template/frmPageController.jsp

Chife Executive Editor

## Dr.P.Gubendiran

(Research Supervisor & Convener)

Assistant Professor, Department of Tamil, VISTAS, Chennai - 600117

Tamil Nadu, India.

gubendiran.sl@vistas.ac.in 9962633122.

Associate Editing& Ideating

## Dr. M. ELANGOVAN

M.A.,M.Phil.,Ph.D.,DIL, M.Sc. Psyc.,

Associate  Professor, Department of Tamil

R.K.M.Vivekanantha College, Mylapore.Chennai 04.

Mail ID ; elangovan@narunthamizh.com

Mobile No: 9444025197.

Journal Web Design  and Technical Support

**Mr.S.M. Inbaarusu**

Department of Animation

VISTAS, Chennai – 600117.

Volume: 01 Issue -03:
July to September 2026

ISSN :
DOI :

# Editorial Board Members

**Dr. David Stanley**
Assistant Professor& Head
Department of Tamil
Loyola College, Chennai, Tamil Nadu, India.
Mail ID ; davidstanley@loyolacollege.edu
Mobile No: 9840553558
https://vidwan.inflibnet.ac.in/profile/487052

**Dr.S.Priya**
(Research Supervisor & Convener)
Assistant Professor, Department of Tamil, VISTAS, Chennai – 600117
Mail ID ; priyas.sl@vistas.ac.in
Mobile No: 9962633122.
https://vistas.ac.in/faculty-in-school-of-languages/

**Dr.P. Geetha**
Assistant professor
Department of Tamil,
Nehru Arts and science college (Autonomous),
Thirumalayampalayam, coimbatore -641105. India.
Mail ID ; nascdrpgeetha@nehrucolleges.com
Mobile No: 9788244940.
https://vidwan.inflibnet.ac.in/profile/612159

**Dr.Santhana Karthikeyan**
Associate Professor & head
Department of Psychology PresidencyCollege Chennai-05.
Email ID: santhanakarthikeyanv.psy@presidencycollegechennai.ac.in
Mobile No: 8825937211.
https://pcc.ac.in/Academia/TeachingStaff?departmentCode=Psychology

**Mr. S.Kalaiselvan** M.A., M.Phil.,Ph.D.,
Associate Professor, & head
Department of MFA, VISTAS, Chennai - 600117.
Tamil Nadu State. India.
Email ID: hodanimation@velsuniv.ac.in
Mobile No: 9941168254
https://vistas.ac.in/faculty-in-school-of-mass-communication/

Dr.P.Nallamuthu
**Assistant Professo, r Department of Zoology**
**Loyola College, Chennai, Tamil Nadu, India.**
Email ID: nallamuthu@loyolacollege.edu
Mobile No: 9962720255
https://vidwan.inflibnet.ac.in/profile/249545

Volume: 01 Issue -03:
July to September 2026

ISSN :
DOI :

**Prof. K.M. Rohitha Dasanayaka**
Head of the Department,
Acting Dean - Faculty of Arts - University of Peradeniya
Sri Lanka.
Email ID: rohithad@arts.pdn.ac.lk , rohithadasanayaka@narunthamizh.com
Mobile No: **+94713212616**
https://arts.pdn.ac.lk/history/rohitha.html

**Professor Datuk Dr. Paramasivam Muthudamy**

**Special Officer to Minister of Malaysia Human Resource Ministry,**

**Human Resource Ministry**

**9th Level, Bock D3, Putrajaya, Malaysia.**

**Tamil Language, Department of Foreign Languages**

**Faculty of Modern Languages & Communication, Universiti**

**Putra Malaysia, 43400 UPM Serdang, Selangor, Malaysia.**

**Tamil Literature - Modern & Ancient**
**+ 60 12-314 4600**
**mparam295@gmail.com**

**https://www.researchgate.net/scientific-contributions/Paramasivam-Muthusamy-2100326525**

**Dr. ASAIKKANNU SAKTHIVEL**

**Senior Lecturer**

Languages And Communication ,

Universiti Pendidikan Sultan Idris (UPSI),

Tanjung Malim, Perak, Malaysia.

+60 133965650 / +91 99628 23278

asaikkannu@fbk.upsi.edu.my,

Blogger: http://sakthiasai.blogspot.com/

Linkedin: https://www.linkedin.com/feed/

https://directory.upsi.edu.my/experts/profile/0A7C998038B6DE4F

Volume: 01 Issue -03:
July to September 2026

ISSN :
DOI :

# எங்களை பற்றி

அன்புள்ளங்களுக்கு வணக்கம்.

பழமைவாய்ந்த தமிழ் மக்கள் வாழும் தமிழக மண்ணிலிருந்து வெளிவரும் நறுந்தமிழ் பன்னாட்டு ஆய்விதழ் உலக மக்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறது. நறுந்தமிழ் பன்னாட்டு ஆய்விதழ் சனவரி 2026ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றது. இவ்விதழ் ஆண்டுக்கு நான்கு முறை சனவரி, ஏப்ரல், ஜீலை, அக்டோபர் ஆகிய திங்களில் வெளிவரும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழர் இனம் உலகில் தொன்மை வரலாறு பெற்ற இனங்களுள் ஒன்று. இதற்குத் தெளிவான சான்றுகள் பல உண்டு. தமிழக வரலாறு, தமிழர் வரலாறு, தமிழ்மொழி வரலாறு என இன்று வரை பல அறிஞர் பெருமக்களால் பலவாறு ஆய்வு செய்யப்பட்டு ஆய்வு முடிவுகள் வெளிவந்துள்ளன. இந்த ஆய்வுகளுக்குத் தமிழக வரலாற்று மூலங்களான இலக்கியங்கள், இலக்கணங்கள், உரைகள், கல்வெட்டுகள், செப்பேடுகள், அகழ்வாராய்ச்சிப் பொருட்கள், நாணயங்கள், கலைகள், வெளி நாட்டார்க் குறிப்புகள், ஆவணக்குறிப்புகள், மொழி ஆகியன சான்றாக அமைகின்றன. இவற்றுள் பல மூலங்கள் இன்னும் முழுமையாக ஆராயப்படாத நிலையிலும் உள்ளன. கிடைத்த மூலங்கள் இன்னும் பலக் கோணப்பார்வையில் ஆராயப்பட வேண்டியதும் இன்றியமையாததாகும்.

தற்போது உலக அளவில் நமது மொழியினை கொண்டு செல்ல தமிழ் மொழியைப் பற்றியும் தமிழர்களைப் பற்றியும் பல ஆய்வுகள் வெவ்வேறு ஆய்வுக் கோணங்களில் முறையான, நடுநிலையான ஆய்வுகள் தேவைப்படுகின்றன. இன்று தோன்றியுள்ள பலவகையானத் துறைகளோடு இணைந்து ஆராயப்பட வேண்டியதும் கட்டாயமாகிறது. அதற்கான சிறு முயற்சியில் உங்களையும் பங்கெடுத்துக் கொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் தமிழ் ஆய்வோடு பிற துறைகளையும் ஒப்பீட்டு பார்த்து தொடர்புபடுத்தி எழுதும் அனைத்து ஆய்வுகளையும் நறுந்தமிழ் பாதுகாப்பு களஞ்சியத்தில் சேமித்து வைக்கப்படும். உங்களது ஆய்வுக்கட்டுரைகளால் தமிழின் உண்மை நிலையினைத் தக்க சான்றுகளோடு உலகறிய முன்னெடுப்போம். நமது தமிழ் மொழியின் உயர்வை உலகிற்கு உரக்கச் சொல்ல நமக்கான களம் இது. அன்புடன் இணையுங்கள்.

**Title** : International Journal Of Narunthamizh
**Variant Title** : நறுந்தமிழ் பன்னாட்டு ஆய்விதழ்
**starting year** : 2016
**Frequency** : Quarterly (January, April, July, October)
**DOI Prefix** :
**ISSN** :
**Format Of Publication** : online
**Subject,** Multidisciplinary Subjects
**Language** Multiple Language (Tamil, English)
**Editor in Chief** : Dr. A.Irudhayaraj
**Publisher** All’s squire Publication

Volume: 01 Issue -03:
July to September 2026

ISSN :
DOI :

## நோக்கமும் வரையறையும்

நறுந்தமிழ் பன்னாட்டு ஆய்விதழ்; மொழி, இனம், பண்பாட்டுக் கலாச்சாரம், சமயம், பொருளாதாரம், அரசியல், வணிகம், கல்வி தத்துவம், மருத்துவம், உளவியல் போன்றவைகளின் தொடர்புடைய சிக்கல்களுக்கான ஆய்வுத் தரத்தை மேம்படுத்தும் நடைமுறை அணுகுமுறைத் தளத்திற்கான ஒரு முன்னோடி ஆய்விதழாக உருவாவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. உயர்தரம் மிக்க ஆய்வுகளைப் பதிப்பித்து அதனைப் பரந்த அளவிலான வாசகர்களுக்குக் கொண்டு சேர்ப்பதே இவ்வாய்விதழின் முதன்மை நோக்கமாகும். ஆய்விதழ் பதிப்புத் துறையில் உயர் அடைவை முன்னிருத்திப் பொறுப்புடனும் தொழில்முறை அணுகுமுறையுடனும் அதனை நிலைநிறுத்துதல்

Volume: 01 Issue -03:
July to September 2026

ISSN :
DOI :


| எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | சிவவாக்கியர், வள்ளலார் சமயச் சிந்தனைகள் ஒப்பீட்டுப் பார்வை (முனைவர் சு. சாந்தி) | 6 |
| 2. | இன்குலாப் படைப்புகளில் சமுதாயம்<br>லூ.இக்னேசியஸ் சேசுராஜா முனைவர் க.கமலா | 13 |
| 3. | பழங்காலத்தில் வழங்கிய தமிழ் இசைக்கருவி பறை .<br>சேவியர்.ப.ஜே, முனைவர் அ.இருதயராஜ் (நெறியாளர்) | 17 |
| 4. | சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை சிறுகதைத் தொகுப்பில் பெண் ஆளுமைகள்<br>கோ. பூர்ணிமா, முனைவர் சு. சாந்தி | 20 |
| 5. | எஸ். ராமகிருஷ்ணன் சிறுகதைகளில் வாழ்வியல் சிந்தனைகள்<br>த. பிரேமா, முனைவர் சு. சாந்தி | 24 |
| 6. | செல்லாதபணம் நாவல் உணர்த்தும் பாத்திரங்களின் இயல்புகள்<br>தா.பார்வதி, முனைவர் யு. துர்கா தேவி | 29 |
| 7. | திருமுருகாற்றுப்படையில் முருக வழிபாடு<br>முனைவர்.க.கமலா | 35 |
| 8. | கே பாலச்சந்தர் திரைப்படத்தில் பெண் ஆளுமை<br>சு. கனகவேல்பாண்டி முனைவர் க. கமலா | 38 |
| 9. | | |
| 10. | | |

Volume: 01 Issue -03:
July to September 2026

ISSN :
DOI :

# சிவவாக்கியர், வள்ளலார் சமயச் சிந்தனைகள் ஒப்பீட்டுப் பார்வை

(முனைவர் சு. சாந்தி)

Date of submission : 20-04-2026 Date of acceptance : 24-06-2026
Date of Publication: 30-07-2026
Corresponding auther's Name :Dr.S. Shanthi
Email : shanthi.sl@vistas.ac.in
Pages : 8 - 12


## ஆய்வுச் சுருக்கம்

மாதாவின் கருப்பையிலே தோன்றி பத்துமாதம் இருந்து பிறந்து வளர்ந்து ஆத்ம சாதனைகளின் மூலம் அறிவற்ற அமரநிலையை எழுதியவர்கள் சித்தர்கள். சித்தி கைவரப் பெற்றவர்கள் அனைவரும் சித்தர்கள் எனலாம். அதன் அடிப்படையில் யோகம் கைவரப்பெற்ற சிவவாக்கிய சித்தர் உருவ வழிபாடு, சாத்திரங்கள், சாதி பேதங்கள், சமய சடங்குகள் போன்றவற்றை கடுமையாக சாடியுள்ளார். இவற்றிற்கு இவருடைய பாடல்களை அகச் சான்றுகளாக அமைகின்றது. வள்ளலாரின் இறை தத்துவத்தின் ஆரம்பம் சைவ சித்தாந்தமே. மாணிக்கவாசகரின் கவிதைகளின் உருகி ஞானப்பாதையைச் சைவ சித்தாந்த தத்துவத்தில் அணுகி, ஆழ்ந்து பின்பு சன்மார்க்கம் என்னும் புதிய சித்தாந்த கொள்கையை உணர்ந்தார் வள்ளலார். இறைவனை காண விரும்புபவர்கள் அவனை வெளியில் தேடினால் பார்க்க முடியாது. அதை தனக்குள்ளே தேட வேண்டும், அப்படி தேடுகின்ற போது நமக்குள் இருக்கும் இறைவனை உணர முடியும், .அப்படி உணர்கின்ற பொழுது தான் நம்மை நாமே உணர்வதாக பொருள் என்று வள்ளலார் தம் பாடல்கள் மூலம் கூறியுள்ளார். எனவே இருவரின் கருத்துக்களையும் ஒப்பிட்டு ஆய்வதுதான் இவ்வாய்வின் நோக்கமாகும்.



## திறவுச்சொற்கள்

சிவவாக்கியர்- வள்ளலார்- சமயம்- இறைநிலை- மூட பழக்கவழக்கம்- சோதி வடிவானவன்.


## முன்னுரை

சித்தர்கள் என்ற சொல்லுக்குச் சித்து கைகூடியவர்கள் என்று பொருள். **"உடம்பை அழியாமல் காத்துக் கொள்ள முயன்றவர்கள் சித்தர்கள் என்றும் கூறப்படுகிறது''1**

யோக சமாதி உகந்தவர் சித்தரே என்பது திருமூலர் கருத்து. சித்தர்கள் 18 என்பது பொதுமரபு. ஆனால் இன்று 50-க்கு மேற்பட்ட சித்தர்களின் பெயர்கள் கிடைக்கின்றன. சித்தர்கள் மனித வாழ்வை உயர்வாகக் கருதியவர்கள். உடம்பைப் பேணவும், மனித ஆற்றலை ஒருமைப்படுத்தவும் கூர்மைப்படுத்தவும் வெளிப்படுத்தவும் வழிகாட்டியவர்கள். சாதி, சமய வேறுபாடற்றச் சமரச சன்மார்க்கத்தைப் போற்றயிவர்கள், போலிச் சடங்குகளையும், மூடநம்பிக்கைகளையும் கண்டித்தவர்கள், சித்தர்களின் பெருமையை உணர்ந்த பாரதியார்.

> **"செத்தவர் தம்மை எழுப்பித் தருகின்ற**
> **சித்தர் பிறந்த தமிழ்நாடு"2**

எனப் போற்றுகின்றார். சித்தர்கள் மக்களுக்குப் போதித்துள்ளப் போதனைகள் பல அவற்றுள் ஒன்று இறைவழிபாட்டு முறையாகும். சமயங்களும், கடவுளரும் வேறு வேறாக இருப்பினும் 'பரம்பொருள் ஒன்றே' என்ற கொள்கையைச் சித்தர் இலக்கியங்கள் பிரதிபலிக்கின்றன. சித்தர்களுள் ஒருவராகிய சிவவாக்கியரின் சமயம் குறித்தக் கருத்துக்களும், சமூகச் சீர்திருத்தவாதிகளுள் முதன்மையானவராகவும் சித்து தன்மை வாய்க்கப் பெற்றவராகவும் கருதப்படும் இராமலிங்க சுவாமிகளின் (வள்ளலார்) சமயக் கொள்கைகளும் ஒப்பீட்டுப் பார்வையில் இங்குத் தரப்படுகின்றன.

முனைவர் சு. சாந்தி உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல், தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை - 600 117.

Volume: 01 Issue -03:
July to September 2026

ISSN :
DOI :

சமயம் என்பது மக்களின் குறைகளைப் போக்கி நிறை நலம் தரும் மாண்பினை உடையது என்பதால் வாழ்க்கையைப் பக்குவப்படுத்தி உய்தியளிக்கும் ஓரியக்கம் எனலாம்.

**உலகப் பொருட்கள் வழியாக மக்கள் அனுபவிக்கும் சிற்றின்பம் நிலையற்றது என்றும் இறையருளைப் பெற்று அனுபவிக்கத்தக்க இன்பம் பேரின்பம் என்றும் அது நிலைத்து நிற்கும் இயல்பினது என்றும் கூறுவர். இப்பேரின்பத்தை அனுபவிக்கப் பெரியோர்கள் இறைவன் அருளோடு வகுத்ததே சமயம் என்பர், இறைவனை அடைவதற்குரிய சாதனங்களைச் சமைப்பது அல்லது பரிபக்குவப்படுத்துவது என்பது இதன் பொருளாகும்.'3** விவேகானந்தர்,

**சமயத்தை உத்தரவாதமற்ற விஞ்ஞான சாஸ்திரம் என்பார்4**

கடவுள் ஒருவரே என்று எல்லாச் சமயங்களும் வலியுறுத்துகின்றன. அக்கடவுள் யார் என்பதில் சமயங்களுக்குள்ளே முரண்பாடுகள் உள்ளன.மக்களை நல்வழிப்படுத்தும் நோக்கில் தோற்றுவிக்கப்பட்டச் சமயம், சாத்திரம், சம்பிரதாயம் என்ற பெயரில் மக்களை அலைகழித்தன. சமயப் சான்றோர்கள் 'கடவுள் ஒருவரே அவர் சமய சம்பிரதாயங்களுக்கு பூசல்களும் சமுதாயத்தில் பிரதிபலித்தன. சமயப் பிணக்கைக் கண்ணுற்ற அப்பாற்பட்டவர் என்ற கொள்கையை வற்புறுத்தி வந்தனர். சமுதாயச் சீர்திருத்தத்தைக் கருத்தில் கொண்டு சமயம் கடந்த ஓரிறைக் கொள்கையைச் சித்தர்களும் தங்கள் பாடல் வழியே போதித்தனர்.

**எங்கும் வியாபித்திருப்பவன்**

இறைவனுக்குச் சிலை வடித்து வழிபடும் வழக்கம் தொன்று தொட்டே நிலவி வருகிறது. எங்கும் நீக்கமற நிறைந்துள்ள இறைவனுக்கு உருவம் வடித்து வழிபட தேவையில்லை என்பதே சித்தர் வாக்கு. உலகிலுள்ள எல்லாப் பொருட்களிலும் நிறைந்து நிற்பவன் இறைவன் என்பதை.

**"மண்ணும்நீ விண்ணும்நீ மறிகடல்க ளேழும்நீ
எண்ணும்நீ எழுத்தும்நீ யிசைந்தபண் ணெழுத்தும் நீ
கண்ணும் நீ மணியும்நீ கண்ணுளாடும் பாவைநீ" (சிவ.பா:9)**

என்றும், **'பாரும்விண்ணு மெங்குமாய் பரந்த அப்பராபரம்' (சிவ.பா.15 வரி.2)** என்றும் சிவவாக்கியர் கூறுகிறார்.

**வள்ளலார், அண்டப் பகுதியிலும், பிண்டப்பகுதியிலும் நிறைந்து விளங்குபவன் அருட்பெருஞ்சோதியாகிய இறைவன்` (திரு.பா.4618)** என்றும்,

**"எவ்வுலகும் எவ்வுயிரும் எச்செயலும் தோன்றி
இயங்கும் இடமாகி எல்லாம் முயங்கும் இடமாகி" (தி.பா: 3142)**

என வியாபித்திருப்பவன் இறைவன் என்கிறார்.

மேலும், சிவவாக்கியர் பாலுக்குள் நெய் கலந்து இருப்பது போல் இறைவன் எங்கும் நிறைந்துள்ளான் என்பதை **"பாலுள்நெய்க லந்தவாறு பாவிகா ளறிகிலீர்" (சிவ.பா.16,வரி:2)** என்கிறார். **'எள்ளுக்குள் எண்ணெய் போல் எங்குமாம்' (திரு.பா:43 )** என்பார் வள்ளலார். 'எள்ளுக்கு ளெண்ணெய்போ லெங்கும் நிறைந்திருந்த5 என்ற பட்டினத்தார் பாடல் இங்கு உன்னற்பாலது.

**கடவுள் ஒருவரே**

சைவம்,வைணவம், சமணம், பௌத்தம், இசுலாம், கிறித்தவம் எனப் பல சமயங்களும் தெய்வங்கள் பலவும் இருப்பினும் எல்லாம் ஒரு பரம்பொருளுக்குள் அடங்கும் என்கின்றனர். கடவுள் ஒருவரே என்பதை

**"எங்கள்தேவ ருங்கள்தேவ ரென்றிரண்டு தேவரோ
அங்குமிங்கு மாகிநின்ற வாதிமூர்த்தி யொன்றலோ
அங்குமிகு மாகநின்ற வாதிமூர்த்தி யொன்றெனில்
வங்கவாரஞ் சொன்னபேர்கள் வாய்புழுத்து மாள்வரே" (சிவ.பா: 133)**

என்கிறார் சிவவாக்கியர், வள்ளலார்,

**"ஆறுகோடியாம் சமயங்கள் அகத்தினும் அவைமேல்
வீறு சேர்ந்தசித் தாந்தவே தாந்தநா**

ISSN :
DOI :

**தாந்தம் தேறும் மற்றைய அந்தத்தும் சிவம்ஒன்றே அன்றி**
**வேறு கண்டிலேன் கண்டிரேல் பெரியர்கள் விளம்பீர்" (திரு.பா:5552)**
என்பார்.

**சிவனே கடவுள்**

சிவன், பிரம்மா, விஷ்ணு முப்பொருளும் சிவனாகிய ஒரு பரம்பொருளுக்குள் அடங்கும் 'சிவனே கடவுள்' என்பதை சித்தர் பாடல்கள் வலியுறுத்துகின்றன. சிவனைத் தவிர வேறு தெய்வம் இல்லை என்பதை சிவவாக்கியர்,

**"_ _ _ _ _ _ விளங்குகின்ற மெய்ப்பொருள்**
**கண்டுகொண்ட மண்டலஞ் சிவாயமல்ல தில்லையே" (சிவ.பா:305) என்றும்,**
**"_ _ _ _ _ _ தில்லை யம்பலத்து ளாடுவான்**
**என்பிரானலாது தெய்வமில்லை யில்லை யில்லையே" (சிவ.பா:310)** என்றும் கூறியுள்ளார்.
**எவ்விடத்தும் எவ்வுயிர்க்கும் இலங்கு சிவம் ஒன்றே (திரு.பா:4175)**
என்பார் வள்ளலார்.

**"யாதொரு தெய்வம் கொண்டீர்**
**அத்தெய்வ மாகி ஆங்கே**
**மாதொரு பாக னார்தாம் வருவர்ஞ்" 6**

எனும் சிவஞான சித்தியார் பாடல் குறிப்பிடத்தக்கது.

**சோதியே கடவுள்**

சிவன் ஒருவரே கடவுள் எனக் கூறும் சிவவாக்கியர் அவர் சோதி வடிவினர் என்கிறார். சோதியை (ஒளியை) கடவுளாக வழிபடும் வழக்கம் மிகத்தொன்மையானது. தமிழர்கள் சூரியனையும்,சந்திரனையும், அக்கினியையும் தெய்வமாக வணங்கி வந்துள்ளனர். மாணிக்கவாசகர் சிவனை,

**"சோதியாய்த் தோன்றும் உருவமே 7**
என்கிறார்
**"சொற்றுணை வேதியன் சோதியானவன்"8**
என்பார் திருநாவுக்கரசர். சிவவாக்கியர், நான்கு வேதங்களையும், ஐந்தெழுத்து மந்திரத்தையும் ஓதிதிரிவதால் இறைவனைக் காணமுடியாது. ஐம்புலன் அடக்கத்துடன், சிந்தை ஒன்றாக உண்மையாக இருப்பவர் யாரோ அவரே சோதியாகிய இறைவனை அடையலாம் (சிவ.பா:38) என்றும்,

**"அணுவினோட கண்டமா யளவிடத சோதியாய்**
**குணமதாக வும்முளேகுறித்து நோக்கின் முத்தியாம்" (சிவ.பா:497)**
என்று உள்ளத்துள்ளே இருக்கும் சோதியாகிய இறைவனைக் கண்டவர்கள் முத்தியடைவர் என்கிறார்.

**அருள்வெளியில் ஒளிவடிவாகக் காட்சி அளிப்பவன் (தி.பா:4170). சுந்தரவடிவச் சோதியாக விளங்குபவன் (திரு.பா:3759)** இறைவன் என்கிறார் வள்ளலார். மேலும் சிவனை ஒளிவடிவில் வள்ளலார் உருவகித்ததை,

**"சிவசிவ சிவசிவ ஜோதி -சிவ**
**சிவசிவ சிவசிவ சிவசிவ ஜோதி**
**சிவசிவ சிவசிவ ஜோதி"**
**(தி.பா:4552)**
எனத் திருவருட்பா கூறுகிறது.

**உள்ளமே இறைவன் உறைவிடம்**

ஒவ்வொருவர் உள்ளத்துள்ளும் இறைவன் உறைந்துள்ளான் என்பதே சித்தர்களின் ஆருடம் உள்ளத்துள் இருக்கும் சோதியாகிய இறைவனை உணராமல் கோவிலென்றும், குளங்களென்றும் ஊர்கள் தோறும் ஓடிதிரிந்து வீணே காலத்தைக் கழித்து மாண்டு போன மக்களே எண்ணிலடங்கா கோடிபேர் உள்ளனர் என்பதை உணர்ந்த சிவவாக்கியர் மக்களிடம்,

**"ஊருநாடு காடுமோடி யுழன்றுதேடு மூமைகாள்**
**நேரதாக வும்முளே யறிந்துணர்ந்து கொள்ளுமே" (சிவ.பா:15)**
என்றும்,
**"ஆலமுண்ட கண்டனா ரகத்துளே யிருக்கவே (சிவ.பா:16)**
**உறியிலே தயிரிருக்க வூர்புகுந்து வெண்ணெய்தேடும்**
**அறிவிலாத மாந்தரோ டணுகுமாற தெங்ஙனே" (சிவ.பா:76)**
என்றும் அறிவுறுத்தியுள்ளார்.

சோதியாகத் திகழும் இறைவனை உள்ளத்தால் மட்டுமே அறிந்துகொள்ள முடியும் என்பதை,

Volume: 01 Issue -03:
July to September 2026

ISSN :
DOI :

**"உளவினில் அறிந்தால் ஒழியமற்று அளக்கின்**
**அளவினில் அளவா அருட்பெருஞ் ஜோதி"**
**(திரு.பா:4615)**

என்கிறார் வள்ளலார்

**"உள்ளத்தில் உள்ளானடி அதைநீ**
**உணர வேண்டுமடிஞ்"9**

என்ற கவிமணியின் கூற்று இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

**சிறுதெய்வ வழிபாடு எதிர்ப்பு**

தமிழகத்தில் நிலவிய சாதி வேறுபாட்டின் காரணமாக மூடநம்பிக்கையின் பாறப்பட்ட சிறுதெய்வ வழிபாடுகள் மிகுந்து காணப்பட்டன. "ஒடுக்கப்பட்ட மக்கள் பூதம் பேய் காளி அம்மன் மாடர்ன் மயான சாமி முதலான கிராமத்தெய்வங்களை வடிவமைத்தும் செங்கல், மண், கல் இவற்றாலான உருவங்கள் அமைத்தும் வழிபட்டு வந்தனர்"10 தங்களுக்கு ஏதாவது நோய் வந்தால் தெய்வக் குற்றம் என்று தெய்வங்களைத் திருப்திபடுத்தும் பொருட்டு ஆடு, கோழி, பன்றி முதலிய உயிரினங்களைப் பலியிட்டு வழிபாடு செய்துவந்தனர். இம்மக்களின் சமய வாழ்க்கை அச்சத்தின் பாற்பட்டதாகவே அமைந்திருந்தது எனலாம். இத்தகைய மக்களிடம் நீங்கள் பலியிட்டு வழிபடும் தெய்வம் உங்களையே அழித்துவிடும் என்று சிவவாக்கியர் எச்சரித்ததை,

**"தங்கள்தேகம் நோய்பெறின் தனைப்பிடாரி கோயிலிற்**
**பொங்கல் வைத்தும் ஆடுகோழிப் பூசைப்பலியை இட்டிட**
**நங்கச்சொல்லு நலிமிகுந்து நாளுந்தோய்ந்து மூஞ்சூராய்**
**உங்கள்குலத் தெய்வமுங்க ளுருக்குலைப்ப துண்மையே" (சிவ.பா:535)**

என்ற பாடல்வழி அறியலாம்.

**பேய்கள், பிடாரிகள் என்ற பெயரில் பூசை, படையல்கள் இட்டு வழிபடும் மக்களைப் 'பேயர்கள்' எனச் சாடுகிறார் சிவவாக்கியர் (சிவ.பா:254).**

சுடுகாட்டில் ஆடிப் பலி உண்ணும் போய்களைத் தெய்வநிலையில் வைத்து பலியிட்டு வழிபாடு செய்வதற்குச் சேமித்து வைத்திருக்கும் பணங்களை வீணாக்கும் மக்களைக் கண்டு ஆவேசத்துடன் வள்ளலார்.

**"_ _ _ _ _ _ _ _ பேயின்**
**விழவுக்கும் புலால் உண்ணும் விருந்துக்கும்**
**(திரு.பா:5331)**
**மருந்துக்கும் மெலிந்து மாண்டார்"**
**"பீழை புரிவான் வருந்துகின்ற பேய்க்கும் கருணை பெரிதளிப்பான்"**
**(திரு.பா:3325)**

எனக் கூறியுள்ளார்.

**வேதம்,ஆகமம்,சாத்திரம், மந்திரம் பொய்யானவை**

மக்கள் மூடநம்பிக்கையின் காரணமாக வேதம், ஆகமம்,சாத்திரம், மந்திரம் இவைகளின் மீது நம்பிக்கை கொண்டு அறியாமையில் உழன்று திரிவதைக் கண்டு சிவவாக்கியர், 'மந்திரங்களை மனதில் உருவேற்றி செப்புவதால் எந்தப் பயனும் இல்லை, மந்திரங்கள் என்பது பொய்யானது. நான்கு வேதங்களை ஓதுவதால் ஞானவழியைப் பெறமுடியாது, வேதங்களையும், சாத்திரங்களையும் ஓதி திருநீறுபூசி வழிபட்டாலும் சிவனை அறிய முடியாது என்கிறார்.

**"நூறுகோடி யாமங்கள் நூறுகோடி மந்திரம்**
**நூறுகோடி நாளிருந்து மோதினால தென்பயன்" (சிவ.பா:142)**

என்பார். வேத, ஆகம, சாத்திரம் உண்மையை உரைக்கவில்லை, பெய்யானவை என்பதை மக்களுக்கு உணர்த்தும் விதமாக வள்ளலார்,

**"உலகறிவே தாகமத்தைப் பொய்யெனக் கண்டுணர்வாய்" (திரு.பா:4177)**

எனச் சுட்டிக் காட்டியுள்ளார்.**சாத்திரங்கள் எல்லாம் தடுமாற்றம் செய்ய வந்தன. நல்லவற்றைப் புகட்டுவது அல்ல (திரு.பா:5515), சாத்திரக்குப்பைகள் பயனுடையன அல்ல (திரு.பா:5805)** எனச் சுட்டிக் காட்டியுள்ளார்.

சிவவாக்கியரும் வள்ளலாரும் தாம் கண்டு அனுபவித்த இறைஅனுபூதியை இவ்வுலக மக்களும் உய்த்துணர வேண்டும் என்ற நோக்குடன் சமயம் என்பதும் வேதம், மந்திரம், சாத்திரம், சம்பிரதாயம் என்பதும் மக்களால் சிருஷ்டிக்கப்பட்டது வீணானது. இவ்அண்டத்தையும் உயிர்களையும் இயக்ககூடிய பரம்பொருள் ஒன்றே அப்பரம்பொருளை நம்

ISSN :
DOI :

உள்ளத்துள்ளே உய்த்துணர்ந்து இறத்தல் முத்தியைப் பெறலாம் என்ற பிறவா பேரின்ப பிறத்தலாகிய இருவினைகளையும் ஒழித்து நிலையை இருவரும் நிலைநாட்டியுள்ளனர்.

**சான்றெண் விளக்கம்**

1.அப்பாய் செட்டியார், மணரமிலாப் பெருவாழ்வு, ப.87
2.பாரதியார் கவிதைகள்
3.கே. ஆறுமுகநாவலர், இந்துமத இணைப்பு விளக்கம் பக்.13
4.சுவாமி விவேகானந்தர், ஞானதீபம், சுடர் – 7.ப.116
5.பட்டினத்தார்பாடல், பூரணமாலை, பா.89
6.ஸ்ரீ அருணந்தி தேவநாயனார், சிவஞானசித்தியார் சுபக்கம், பிரமாணவியல் இரண்டாம் சூத்திரம், செ.114
7.திருவாசகம், பா. 155
8.திருநாவுக்கரசர் தேவாரம், நமச்சிவாயத் திருப்பதிகம்,பா.1
9.மு கவிமணிதேசிக விநாயகம் பிள்ளை, மலரும் மாலையும், கோவில் வழிபாடு. பா.10
10.இரா. பொன்னு, வைகுண்ட சுவாமிகள் ஓர் அவதாரம், ப.46

Volume: 01 Issue -03:
July to September 2026

ISSN :
DOI :

# இன்குலாப் படைப்புகளில் சமுதாயம்

**லூ.இக்னேசியஸ் சேசுராஜா முனைவர் க.கமலா**

**Date of submission : 12-05-2026 Date of acceptance : 24-05-2026**
**Date of Publication: 30-07-2026**
**Corresponding auther's Name :Dr.K.Kamala**
**Email : kkamala.sl@vistas.ac.in**
**Pages : 13 - 16**

## முன்னுரை

விலங்குகளிடமிருந்து தன்னை வேறுபடுத்திக் கொண்ட நாள் முதலே மனிதன் தனித்து வாழும் தகுதியை இழந்தான். சார்ந்து வாழும் தம் சக இனத்தாருக்கு உதவியும் உதவி பெற்றும் கூட்ட கூட்டமாக வாழ்ந்து சமுதாயம்" என்னும் நிலையை அடைந்தான் அத்தகு சமுதாயத்தில் மனிதப் பிறவி எடுத்திருப்பது தனக்காகவும் தன் மனைவி மக்களுக்காவும் மட்டும் இல்லை.தன்னல இச்சைகளுடன் வாழ்வதற்காகவும் இல்லை.தான் சார்ந்துள்ல சமுதாய மக்களுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் உற்ற துணையாக உதவிகள் பிரிவதே ஆகும்.

மனிதன் ,நாகரிகம் வளர,வலர அறிவுத்ட்தேர்வு அடைய,அடைய அரசியல் கலம் அமைத்துத் தன் இனம்,மொழி,நாடு போன்றவற்றைக் காப்பாற்றும் கடமைகளை ஏற்கத் தைப்பட்டான.

**"காலப்போக்கில் வேற்று நாட்டவர், வேற்று இனத்தவர், யேற்றுபொழியினர் மொழி, இனம் ஆகியவற்றை அடியாப்படுத்தி அவற்றின் உரிமைகளைப் பறிக்கும் போது அவற்றை மீட்பதற்கும் காப்பதற்கும் துணிந்து போராடும் வீரர்கள் உலகில் ஆங்காங்கே தோன்றினர். (1)**

அவ்வாறு தன்னலமே இல்லாமல் தங்கள் உயிரையும் விலை கொடுக்க முனைந்து,பொதுநல நோக்கங்களுக்கா,நெஞ்சுரத்தோடு போராடும் வீரர்களே இலட்சியப் போராளிகள் என்னும் முத்திரயை வரலாற்றில் எடுக்கின்றனர்.

ஒரு சமுதாயத்தோடு மற்றோரு சமுதாயம் இணைந்து வாழும்போது அச்சமுதாயத்தில் மாந்தர்களின் பண்புகளில் மாற்றங்கள் ஏர்படக் காரணமாக இருப்பது இரத்தக் கலப்பு ஏற்படுத்தும் உறவு முறைகளே ஆகும்.

உலகத்து மாந்தரினங்களில் மண்ணுக்குத் தகுந்தாற் போலத்தான் மனிதப் பண்புகளும், தோற்றங்களும் அமைகின்றன.(2)

'மனிதன் உலகின் பல்வேறு இடங்களில், பல்வேறு காலங்களில் பல்வேறு தோற்ற வேறுபாடுகளுடன் தோன்றியிருக்கிறான், **"இனத்தை அறிவதற்குரிய அடையாளங்கள்::**

**1 தோல், தலைமயிர், கண்கள்ஆகியவற்றின் திறம்**

**2. மேல் இமை, மூக்கு, உதடுகள் ஆகியவற்றின் வடியமைப்பு**

**3. முகம் தலை ஆகியவற்றின்அமைப்பு**

**4.உடலின் நீளமும் பொருந்தமும்**

மேற்கண்டவற்றின் அடிப்படையில் உலக இனங்களை மூன்று தலைமை இனங்களாக மானிட இயல் அறிஞர்கள் பிரித்திருக்கிறார்கள்.

**அவை: 1. நீக்ரோ இனம்**
**2. காகேசிய இனம்**
**3. மங்கோலிய இனம் "(3)**

இவ்வினங்கள் ஒன்றோடொன்று கலக்க நேரிடும் போது. ஒரு மண்ணில் தோன்றிய இனம், அப்பண்யை இழந்து புதிய பண்புகளைப் பெற்றுத் தன்னுடன் வாழும் சகமக்களிடம் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

எடுத்துக்காட்டாகத் தமிழ்நாட்டைப் பொறுத்தவரி அக்குறிப்பிட்ட ஒரே இனம் இருந்ததாகக் கூறமுடியாது."நீக்ராய்ட்"

லூ.இக்னேசியஸ் சேசுராஜா, முனைவர்பட்ட ஆய்வாளர்,
முனைவர் க.கமலா, **பேராசிரியர்(நெறியாளர்),**
**தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல், தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை - 600 117.**

Volume: 01 Issue -03:
July to September 2026
ISSN :
DOI :

தமிழ்நாட்டைல் இனக்கலப்பு சங்க காலத்திரகு முன்பே தொடங்கிவிட்டது என்பதைச் சங்க இலக்கியங்களும்,பின்வந்த இலக்கியங்களும், கதைகளும் படையெடுப்புகளும், அய்ல்மொழிச் செல்வக்கும் சில சாதிகளும் உறுதிப்படுத்துகின்றன.” எது எப்படியாயினும் உல்லக வரலாற்றில் எவ்விடம் நோக்கினும் கலப்பின மாந்தரும் பலவகை பண்புடைய மக்களினமும் தோன்ற அடிப்படையானது.பர் இனம் புலம் பெயர்ந்ததே ஆகும்.அதனால்தான் ஒரு சமுதாயத்தில் போட்டி பொறமைதோன்றுகிறது.மேலும் பல மதங்களும், சாதிகளும், பொருளாதார, ஏற்றத்தாழ்வு நிலைகளும் தொன்றி வேறுபட்டை ஏற்படுத்துகின்றன.

இங்ஙனம், வேறுபாடுகள் நிறைந்த சமுதாயத்தில் அமைதி நிலைபெறாது. அந்நிலையில் வேறுபாட்டுக்குக் காரணமான அறியாமையை நீக்க அறிவுரையைத் தர இலக்கியங்கள் தோன்றுகின்றன.

**சமுதாயமும் இலக்கியமும்**

மானுட சமுதாயத்தில் ஒருவரின் செயல்பாடு பிறரிடம் தாக்கத்தை ஏறப்டுத்துகிறது. ஒரு சமுதாயத்தில் சிலர் பலர் வருந்துமாறு வாழும்போது தமக்கென்று வாழ்பவர் அவற்றைக் கண்டு கொள்வதில்லை. பாரதிதாசனின் கூற்றுபோல,தூய உள்ளம், அன்புள்ளம், அரவணைக்கும் அன்னையுள்லம்,கொண்ட நற்பண்புடையோர் அதனை மாற்ற எண்ணுகின்றனர். வள்ளுவர் இதனை,

**“பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்**
**பண்புக்கு மாய்வது மண்"**

என்கிறார்.பண்புடையோர்,சமுக அவலங்களைக் கண்ணுறும்போது மந்தில் தோன்றும் எண்ணங்களைக் கருத்தாக்கித் தன் படைப்புகளின் வழி வெளிப்படுத்துகின்றனர். அறிவு ஆற்றல் அனுபவம் முதலியவற்ரைச் சமுதாய அவலநோய்க்கு மருந்தாக்கி **இலக்கியமாகத் தருகிறார்கள். தமிழ் மண்ணிலும் சங்கலப்** புலவர்கள் தொடங்கி வள்ளுவன், இளங்கோ, வள்ளலார், பாரதி, பாரதிதாசன் போன்ற கவிஞர்கள் சமுதாய அவலங்களைத் தன் கவிதையில் தந்துள்ளார். அதுபோன்றே, கவிஞர் இன்குலாப் அவர்களும் சமுதாயச் சிந்தனைகயைத் தம் கவிதையில் மையப் பொருளாக்கியுள்ளர்.

**சமுதாய அவலம்**

மாந்தர் தோன்றிய காலத்திலிருந்து எவ்வளவோ காலம் தள்ளிவந்து விட்டோம். இதுவரையில் எங்கும் உழைப்பவன் நலப்படவும்வில்லை ஏய்த்து வாழும் கூட்டம் துயர்ப்படவுமிலை.

**காலுகுச் செருப்புமில்லை**
**கால் வயிற்றுக் கூழுமில்லை**
**பாழுக்குழைத்தோமடா- என் தோழனே**
**பசையற்றுப் போனோமடா.**

என்கின்ற ஜீவாவின் வரிகளுக்கிணங்கவே உழைத்து வழும் மக்களினம் மாண்பிழந்து கிடக்கிறது. அதனைச் சீர்செய்ய வேண்டிக் கவிஞர் இன்குலாபின் கருத்துகள், அரசியல், கல்வி, மக்களின் வறுமை, சமுதாய நிகழ்வுகளின் மேல் கிண்டல், நாடகப் புலம், விமர்சனம், ஏக்க உணர்வு சினிமாவைச் சாடல் என்று பலவாறாக வெளிப்படுகின்றது.

**வன்முறை**

தமிழ்ச் சமுதாயத்தில் வன்முறையின் தோற்றம் எங்கு தொடங்குகிறது என்பத்றகுக் கவிஞரின் கற்பனை முற்றிலும் முற்போக்காகவே இருக்கிறது.

“தமிழில் அரசு பற்றிய சிந்தனை ஆயுத பலாத்காரத்தோடுதான் ஆரம்பமாகிறது வன்முறையை விளக்கி வைத்துவிட்டு அரசு பற்றிய எந்த ஞானியாலும் சித்திக்க முடியாது. தண்டல்காரன் முதலில் தடி எடுத்தான், அதைச் செங்கோல் என்று சொல்லிக் கொண்டாள்.

ஒரு சமுதாயத்தில் இரத்தம் சிந்துவது மட்டுமே வன்முறை இல்லை மக்களின் அடிப்படைத் தேவைகள் கிடைக்காமல் அல்லல்படுவதும் வன்முறையே என்கிறார் கவிஞர். அது**மட்டுமன்றி** முதலாளி உழைப்பாளியின் வேர்வையைத் திருடுவதும் வன்முறை என்கிறார்.

"இரத்தம் சிந்துவது மட்டும் தானா வன்முறையில் ஏற்பட்டாயம்?. சூழிவிழுத்த கண்கள், எலும்பும் தோலுமான மேனி- பஞ்சம் பட்டினி இவையெல்லாம்

Volume: 01 Issue -03:
July to September 2026
ISSN :
DOI :

வன்முறை இல்லையா? களவும் கொள்ளையும் வன்முறை என்றால் வேர்வையைத் திருடுவது வன்முறை இல்லையா?" என்கிறார்.

**அகிம்சை**

மக்கள் வாழ்க்கை முறையில் அகிம்சை என்பது பொருளற்ற ஒன்றுதான் என்பதை,

“கறக்கப்படும் பசுக்களுக்கு முன்னால் நிறுத்தப்படும் வைக்கோல் கன்று குட்டிகளைப் பார்த்த பிறகு சொல்லுங்கள். உயிர் இரக்கம், அகிப்சை போன்ற சொற்களுக்கு உள்ளீடு ஏதேனும் உண்டா?" சொல்லும் பொருளும் இன்று நேற்றல்ல நெடுங்காலமாகவே பிரிந்து போய்விட்டன

என்கிற பாடல் வரிகள் விளக்குகின்றன.

**சமுதாயக் கடமை**

'மக்களுக்கு ஏற்படும் அநீதிகளை எதிர்ப்பது மட்டுமே சமுதாயக் கடமை இல்லை. ஒரு சமுதாயத்தின் மீது சுமத்தப்படும் சமுதாய மூடத்தளங்களை எதிர்த்துக் குரல் கொடுப்பதும் சமுதாயக் கடமையே ஆகும். என்பதே கவிஞரின் கருத்து. அதனைப் பின்வரும் செய்தியால் புலப்படுத்துகிறார்.

மதுரையில் கோவலன் பொட்டல் என்ற இடத்தை தொல்பொருள் ஆய்வாளர் தோண்டினர். அங்கு வெட்டப்பட்ட அடையாளங்களுடன் கூடிய ஓர் எறுப்புக் கூடுகிடைத்தது. அது இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டது கோவலன் பொட்டலில் கிடைத்தால் அது கோவைன் எலும்புக் கூடாகத்தான் இருக்க வேண்டும் என்று அமைச்சர்களும் ஆய்வாளர்களும் தீர்மானித்தார்கள்."

கவிஞரின் பார்வையில், ஒரு சமுதாயத்தில் விடுதலை வேண்டுவோ மெனில் அதற்கு மூடத்தன எதிர்ப்பு மிகவும் அடிப்படை என்பதேயாகும். ஏனெனில் நேரடித் தாக்குதல் என்பது பொருளிழப்பை மட்டுமே ஏற்படுத்தும். ஆனால் கடவுளின் பேரால், கலாச்சாரத்தின் பேரால் ஏற்படுத்துகிற பகுத்தறிவிற்கு எதிராயா பிரச்சாரங்கள் ஒரு சமூகத்தின் எதிர் காலத்தையே அறியாமை இருளில் ஆழ்த்திவிடும். அதனால் தான் கவிஞர் ஆதங்கப்படுகிறார்.

மக்களின் தலைவன்

ஒரு நாட்டின் சிறப்புக்கு அந்நாட்டின் மன்னனும் மக்களுமே காரணம் ஆவர். மன்னனாலும் மக்களாகும் ஆகக் கூடிய காரியங்கள் இரண்டு ஆகும் அவை1.நாட்டின் பாதுகாப்பு 2.நாட்டின் விளைபொருளைப் பெருக்கி பொருளாதாரத்தை மேம்படுத்துதல் இவ்விரண்டும் வேலைகளும் சங்க காலத்தில் சிறப்பாக நடந்தன.மக்களும் மன்னரும் முனைந்து செயல்பட்டனர்.ஆனால் காலப்போக்கில் மக்களின் தலைவனான மன்னர்கள் பொதுநல மனப்பான்மையில் இருந்து மாறிச் சுயநல்வாதிகளாகவும், மக்கலைச் சுரண்டுவோர்களாகவும் மாறினர் என்பதே கவிஞர் இன்குலாபின் கருத்து அரசன் என்பதற்காக மக்கள் அநீதியைப் பொறுக்கக் கூடாது என்பதைத் தன் மணிமேகளையில் வாழந்தனை கூற்றாக,

”இளவரசன் என்பதற்காகவும் அரசாங்கம் என்பதற்ககவும் நீங்கள் கொடுமையைப் பொறுத்துக் கொள்வீர்களா?’ என்கிறார்.மேலும் மன்னர்கள் ஒருவகையில் மக்களைச்சுரண்டும் கொள்ளையர்களே என்பதை,

”ரோமானியர் சீமாட்டிகள் தமிழ்நாட்டில் கொட்டிய தங்க நாணயங்கள் எங்கே போயின? அவை பாண்டியனின் மகுடத்தில் பளபளத்தன,பாண்டிமாதேவியின் காற்சிலம்பாய் கிணுகிணுத்தன அந்தத் தங்க நாணயங்களின் பூர்வீகம் என்ன?அது அடிமைகளின் தசைமுறுக்கில் இருந்த்து அவர்களின் நெற்றி வியர்வையில் இருந்தது”

என்றும் விளக்குகிறார்.இன்றும் மன்னரின் மறுவடிவமாக மக்கள் தலைவர்லாக இருக்கும். நாடாளும் வேந்தர்களும் அந்நிலையில் தான ஆட்சியைத் தொடர்கிறார்கள் என்பது கவிஞரின் கருத்து.

”மூவேந்தர் ஆண்டகாலம், அகமும்,புறமும் திருக்குறளும் சிலப்பதிகாரமும் எழுந்த காலம் அதுவும் முறைபாடுள்ளது தானா?” மூவேந்தர் ஆண்ட காலம், அகமும் புறமும் திருக்குறளும். சிலப்பதிகாரமும் எழுந்தகாலம் அதுவும் குறைபாடுள்ளதுதானா?" “ஆமாம் ஆண்டான் அடிமை என்கிற பாகுபாடு அந்தக் (காலத்திலேயே இருந்துச்சா இல்லையா? சொல்லுங்க அந்தக் (காலத்திலே சூத்திரனுடைய பிருஷ்பத்தை வெட்டலையா? ஏகலைவனுடைய விரல்

ISSN :
DOI :

வெட்டப்பட்டு துடிக்கலையா?. சூத்திரனுடையகாதிலே ஈயத்தைக் காய்ச்சி ஊத்தலையா?"- என்கிற கேள்விகள் மக்கள் நலத்திற்குப் பங்கம் விளைவிக்கும் அரசு எப்படி பொற்கால அரசாகும் என்பதாக அமைகிறது.

**சமுதாயத்தில் கல்வி**

சமுதாய மாற்றத்திற்கு ஆற்றல் மிகு கருவி 'கல்வி' எனக் கருதப்படுகிறது. கல்வியின் வாயிலாகத் தகுந்தமாறுதல்களை உருவாக்கிக் கொள்வதுடன் சமுதாயக் கவ்வி மூலமாகத் தன்னை தனி மனிதனும் நவீனப்படுத்திக் கொள்ளமுடியும், கருங்கக் கூறின் கல்வியே ஒரு மனிதனை, மனித வாழ்வை முழுமைப்படுத்தும், செம்மைப்படுத்தும். அதனால்தான் வள்ளுவகும்.

"ஒருமைக் கண்தான் கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப்புடைத்து"48 என்கிறார் வள்ளுவர்.

**தொகுப்புரை**

கவிஞரின் நல்வாழ்வுச் சிந்தனைகள் சமுதாய நல்வாழ்வுத் சிந்தனைகளாக மலர்ந்துள்ளன. அச்சிந்தனைகள் ஆவேசம் அடங்கியது நலங்கனிந்த செயலாக்கப் பண்புகளுடன் வெளிப்பட்டுள்ளன. மக்களின் வாழ்க்கை முறைகளையும் அவர்களின் தாக்கங்களையும் பற்றுக் கோடாகக் கொண்டு வெளிப்படும் சிந்தனைகள் கவிஞர் இன்குலாப் படைப்புகளில் பல விதவடிவங்களாக நிலைபெறுகின்றன. சமுதாய அவலம், அரசியல், வன்முறை, அமில்சை, பக்கள்தலைவன், கல்வி, வறுமை, திரைப்படம், என்ன மாற்றம் தேவை? வேண்டுவது என்ன? –ஏக்க உணர்வு! அனுபவம், கற்றவர்கள் என்பனவே அவ்வடிவங்களாகும்.

Volume: 01 Issue -03:
July to September 2026

ISSN :
DOI :

# பழங்காலத்தில் வழங்கிய தமிழ் இசைக்கருவி பறை

(சேவியர்.பி.ஜே, முனைவர் அ.இருதயரா்ஜ்)

Date of submission : 25-04-2026 Date of acceptance : 02-05-2026
Date of Publication: 30-07-2026
Corresponding auther's Name :Dr.A.Irudhayaraj
Email : irudhayaraj.sl@vistas.ac.in
Pages : 17 - 19

## முன்னுரை

சங்க கால மக்கள் காதலையும் வீரத்தையும் இருகண்களாகப் போற்றி வந்தார்கள். அவர்களின் குழந்தை இறந்தே பிறந்தாலும் அவர்களின் உடலில் வீரத்தழும்பை ஏற்பத்திய பின்னரே அடக்கம் செய்வார். வீரத்தையே இளைஞர்கள் தங்கள் கடமையாக கருதிவந்தகாலம் அது. வீரவுணர்வோடு வாழவும் அவ்வுணர்வை உடலில் தோன்ற செய்யவும் உருதுணைாக இருந்தக் கருவி பறையிசைக்கருவியாகும்.

தொல்காப்பியர் கருத்து

இலக்கியங்கள் மக்களின் நாகரிக மேம்பாட்டையும், வாழ்வியல் சார்ந்த கொள்கைகளையும் வலியுறுத்தும் வகையில் அமைந்துள்ளன. சங்க இலக்கியப் பாடல்கள் புலப்படுத்தும் ஐவகை நிலஅமைப்புக் கூறுகள், அந்நிலம் சார்ந்த வாழ்வியல் பதிவுகள், ஒழுக்க நெறிப்பாடுகள் அனைத்தையும் திணை என்ற சொல்லால் சங்கப் புலவர்கள் குறித்துள்ளனர். இதன் வழி ஒவ்வொரு திணைக்கும் உரிய தெய்வம், தலைமக்கள், உணவுமுறை, விலங்குகள், தாவரங்கள், பறை, பண், தொழில் எனத் தனித்தனியானப் பண்பாட்டு, வாழ்வியற் கூறுகள் விளங்கியுள்ளதனை அறியமுடிகின்றது. தொல்காப்பியர் இதனை,

'தெய்வம் உணாவே மாமரம் புள் பறை

செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ

அவ்வகை பிறவும் கருவென மொழிப"

என்பதன் வழி உணரலாம்.

சங்க காலத்தில் பறையிசை

போர்ச் செய்தியை அறிவிக்கும் கருவி

வீரர்களைப் போர்க்கு அழைத்துச் செல்லவும் அவர்களின் உடல் நரம்பில் வீரவுணர்வைத் தூண்டவும் பறையையிசைத்தார்கள். இதனையே நன்னூலார் பகைவருடன் போர்ச்செய்ய வீரரை அழைத்துக்கொண்டு வரும் கருவி பறை என்று இலக்கணம் கூறுகின்றார். இதனை,

பூசாற்றண்ணுமை – பகைவருடன்

போர்புரிதற்காக வீரரை

அழைத்தற்குக் கொட்டும் பறை (நன்னூல்)

"பறைச்சீர் தூங்கப்
பருந்து அருந்துற்ற தானையடு செருமுனிந்து
அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்
தாம்மாய்ந் தனரே, குடைதுளங் கினவே
உரைசால் சிறப்பின் முரசு ஒழிந்தனவே"
(புறம் 62)
என்பதன் வழி அறியமுடிகின்றது.

சேவியர்.பி.ஜே, முனைவர்பட்ட ஆய்வாளர்.
முனைவர் அ.இருதயராஜ் உதவிப் பேராசிரியர் (நெறியாளர்),
தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல், தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை - 600 117.

ISSN :
DOI :

**மக்களுக்குச் செய்தியை அறிவிக்கும் கருவி**

தொல்குடியிற் பிறந்தோனாகிய வள்ளுவன், வச்சிரப்படை நிற்கும் கோயில்னிடத்தே உள்ளதாகிய நெய்வளம் நிறைந்திருக்கும் முரசத்தினைக் கச்சையிணிந்த யானையின்

பிடர்தலையிலே ஏற்றிவைத்துக் கொல்லேற்றின் தோலினைப் போர்த்திருப்பதும் இடிபோன்ற முழக்கொலியைக் கொண்ட முரசினை குறுந்தடி கொண்டு அடித்து முழங்கி இந்திர விழாக்கோளினை நகருக்கு அறிவத்தான் என்பதை,

“வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசம்

கச்சை யானைப் பிடர்தலை ஏற்றி

ஏற்றுரி போர்த்த இடியுறு முழக்கிற்

கூற்றுக்கண் விளிக்கும் குருதி வேட்கை

முரசுகடிப் பிகூஉம் முதுகுடிப் பிறந்தோன்”

(மணிமேகல1.4)

என்பதன் வழி அறியமுடிகின்றது.

நவீன காலத்தில் பறையிசை

ஏற்றத் தாழ்வுகள் மிகுந்த நவீன காலத்தில் மனிதர்களிடையே வேறுபாட்டையும், பிரிவினையையும் ஏற்படுத்தியவர்கள் பறையிசையயைத் தாழ்த்தப்பட்ட மக்களின் குறியீடாக கருதிவருகின்றது. இன்றைய சமுதாயத்தில் புறந்தள்ளப்பட்டு, தாழ்த்தப்பட்ட இனத்தவன் சுய மரியதையுடன் வாழ முடியவில்லை என்பதைத் தமிழன்பனின்,

“ஓரடி முன்னே

மாறான் நகர்ந்தான்.

நில்லடா பறையா

நில்லு ….

ரொம்பத் திமிர்தான் உனக்கு ..?”

(தமிழன்பன்-அந்த நந்தன்-112)

என்ற கவிதை அடிகள் உணர்த்துகின்றன.

பறையிசையும் தமிழினமும்

- வழிபாட்டில்
- வெறியாட்டு பறை
- சாக்காட்டுப்பறை
- தினைபுனம் காப்பதில்
- வெற்றியை தெறிவிக்க
- போர்க்களத்தில்
- வழிபறி செயலில்
- இறுதி சடங்கில்

போன்ற தலைப்புகளின் கீழ் விரிவாக பார்க்கலாம்.

முடிவுரை

இசைகருவிகளில் தாயாக விளங்கும் புறந்தள்ளபட்டு, தாழ்த்தப்பட்ட தமிழ் இன மக்களின் அடையாளமாக காணப்படும் பறையிசை, உடம்பில் உணர்வுகளை தூண்டி வீரமிக்கவராக வாழசெய்கின்றது. இவற்றை இசைப்போர் உயர்ந்த குலத்தில் பிறந்த அறிவு நிறைந்தவர் ஆவர்.

---

பார்வை நூல்கள்

1.தொல்காப்பியம் பொருள்.
2. நன்னூல்

Volume: 01 Issue -03:
July to September 2026

ISSN :
DOI :

3.புறநானூறு
4. நம்பியகப்பொருள்
5.தமிழண்ணல்
6.மணிமேகலை
7.தமிழன்பன் -அந்த நந்தனை எரித்த நெருப்பின் மிச்சம்

Volume: 01 Issue -03:
July to September 2026

ISSN :
DOI :

# சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை சிறுகதைத் தொகுப்பில் பெண் ஆளுமைகள்

கோ. பூர்ணிமா, முனைவர் சு. சாந்தி

Date of submission : 28-04-2026 Date of acceptance : 24-05-2026
Date of Publication: 30-07-2026
Corresponding auther's Name :Dr.S. Shanthi
Email : shanthi.sl@vistas.ac.in
Pages : 20 - 23

**ஆய்வுச்சுருக்கம்**

அம்பையின் எழுத்துக்கள் மனித மனங்களில் மாற்றத்திற்கான தூண்டுதலாகவே இருப்பதை அவரது படைப்புகளான சிறுகதைகள் உணர்த்துகின்றன. சிறுகதை இலக்கியமானது இக்கால இலக்கிய வகைகளுள் தனக்கென தனி அடையாளத்தையும், தனித்துவத்தையும் உருவாக்கியுள்ளது. அம்பையின் சிறுகதைகள் கதையாக மட்டுமில்லாமல் படிப்போரின் வாழ்வியல் தடங்களை ஒருங்கிணைக்கும் நினைவுச் சின்னங்களாகவும் இருக்கின்றன. அம்பை, தனது படைப்புகள் மூலம் பெண்களின் பிரச்சினைகளில் கவனம் செலுத்தும் ஒரு பெண்ணிய ஆய்வாளர் ஆவார். அம்பை அவர்கள் தம் கதாப்பாத்திரங்களின் வழி மனித சமூகத்தில் பெண் குறித்த பொதுப்புத்தியின் திணிப்பை கட்டவிழ்க்க முற்பட்டுள்ள நிலையினை வெளிப்படுத்துவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

**திறவுச்சொற்கள்**

**பெண்ணியம், தந்தை வழி அடக்குமுறை,தாய்,தமக்கை, மகள், மனைவி, காதலி.**

**முன்னுரை**

காலந்தோறும் பெண்மைக்கான இலக்கணங்கள் பெண் அல்லாதவர்களால் மட்டுமே பெரும்பான்மையும் தீர்மானிக்கப்பட்டதாக உள்ளது. அவை மக்கள் சமூகத்தின் பொதுப்புத்தியில் திணிக்கப்பட்டு காலம் காலமாக மக்கள் மனங்களில் கடத்தப்பட்டும் வருகின்றது. பெண்மை குறித்த உண்மை நிலையினை வெளிக்கொண்டு வருவதற்கான முன்னெடுப்புகள் மக்கள் மனதில் புதிய கண்ணோட்டத்தினை ஏற்படுத்தின. அவற்றுள் எழுத்துலகம் பெண்மைக்குப் பெரும் புரட்சியை ஏற்படுத்தியது என்றால் மிகையல்ல.

பெண்மை குறித்த தன்னுடைய அனுபவங்களையும், புற உலகோடு படைப்பாளி கொண்ட தொடர்பு, கற்பனை உலகில் உள்ள ஈடுபாடு ஆகியவற்றினைத் தன் படைப்பின் கதாப்பாத்திரங்கள் வழி படைப்பாளன் வெளிப்படுத்த முனைகிறான். அவ்வகையில் மேற்காண் அனைத்துத் தன்மைகளும் இடம்பெற்ற படைப்பிலக்கியமாக எழுத்தாளர் அம்பை அவர்களின் சிவப்பு நிறத்துடன் ஒரு பச்சைப் பறவை என்னும் சிறுகதைத் தொகுப்பினைக் காண முடிகின்றது. அம்பை அவர்கள் தம் கதாப்பாத்திரங்களின் வழி மனித சமூகத்தில் பெண் குறித்த பொதுப்புத்தியின் திணிப்பை கட்டவிழ்க்க முற்பட்டுள்ள நிலையினை வெளிப்படுத்துவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

**படைப்பாளியின் படைப்புலகம்**

சி.எஸ் லட்சுமி என்ற இயற்பெயர் கொண்ட எழுத்தாளர் அம்பை அவர்கள் பெண்ணியக் களச்செயல் பாட்டாளர். நாற்பது வருடங்களுக்கும் மேலாகப் பெண் வரலாறு, பெண்களின் வாழ்க்கை குறித்த ஆய்வுலகில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி வாழும் நூலாசிரியரின் பெண்மை குறித்த மன உறுதிப்பாடும், பெண்மை குறித்த சிந்தனைகளும் பாரம்பரியமும், பண்பாடும் பெண்களை நேர்முகமாகவும், மறைமுகமாகவும்

கோ. பூர்ணிமா, முனைவர்பட்ட ஆய்வாளர்.

முனைவர் சு. சாந்தி உதவிப் பேராசிரியர்,

தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல், தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை - 600 117.

Volume: 01 Issue -03:
July to September 2026

ISSN :
DOI :

எவ்வாறு ஒடுக்குகின்றன என்பன போன்ற சமூக ஆதிக்கம் மற்றும் கருத்தியல் ஆதிக்கம் பற்றி அவரது சிந்தனைகள் அவர்தம் "**சிவப்பு நிறத்துடன் ஒரு பச்சைப் பறவை" சிறுகதைத் தொகுப்பில் காம்மு, காமும்மா, கமலா, மைதிலி, சாந்தி முதலான பெண் கதாப்பாத்திரங்களாக உருப்பெற்றுள்ளன என்றால் மிகையல்ல. சன்னல் வழியாகப் புற உலகினைக் கண்டு தான் பெற்ற அனுபவங்களின் பகிர்வாகக் கதைகளைக் காட்சிப்படுத்துகின்றார் எழுத்தாளர் அம்பை.**

**தொண்டை புடைத்த காகம் ஒன்று**

"தொண்டை புடைத்த காகம் ஒன்று" என்ற முதல் கதை காகம் கரைதல் ஓசையோடு தொடங்குகிறது. நினைவலைகளை மீட்டெடுக்க அக்கரைதல் ஒலி போதுமானதாக உள்ளது. காக்கையைக் காணும் போதெல்லாம் கடந்து சென்ற காலத்தின் இழைகளை இழுத்து வந்ததாக, அதனோடு பயணிக்கின்றாள். ஒரு கட்டத்தில் நினைவுகள் கயிறாக முறுக்கிக் கொண்டு அவளை அடிப்பது போன்று இருப்பதாக எண்ணுகின்றாள். இறுதியில் காகம் இறக்கும் தருவாயில் திடீரென்று வீரிட்டு கரைத்தபடி பறந்து வந்தது ஒரு காக்கைக் கூட்டம் என்று கதை முடிகின்றது. ஆம்!.. நினைவுகளைத் தட்டி எழுப்புவது முடிவற்ற செயலாகின்றது.

சாம்பல் மேல் எழும் நகரம்:

பெண்மை மென்மையானவள் என்ற பொதுபுத்தியின் திணிப்பைக் கதாப்பாத்திரங்கள் வழி சூறையாடுவதைப் பல இடங்களில் நூலில் காண முடிகின்றது. நகரமயமாதல் கொடுமையினைக் கூறும் "**சாம்பல் மேல் எழும் நகரம்" கதையில் வீட்டு வேலை செய்யும் காம்மு கதாப்பாத்திரம் மன உறுதி படைத்தவளாக, புற உலக நிகழ்வுகளை, முதலாளித்துவ மாற்றத்திற்கு எதிர் குரல் எழுப்புபவளாகப் படைக்கப்பட்டுள்ளாள்.**

**பயணம் 21:**

பயணம் 21 சிறுகதையில் வரும் காமும்மா கதாப்பாத்திரம் பெண்மைக்கான இலக்கணங்களை வகுத்தவர் யார்? என்ற வினாவினை எழுப்புகின்றது. பெண்மை குறித்த விமர்சனங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவள் காமும்மா. 85 வயதானவள், தன் இளவயதில் ஒரு நாட்டியத் தாரகை. வெளிநாடுகளுக்குச் சென்றவள். விருது பல பெற்றவள். மேடையில் ஆடக் கூடாது என்ற தனது உயர்மட்டக் குடும்பத்துக் கணவனைப் பிரிந்து, வயிற்றில் ஐந்து மாதக் குழந்தையுடன் வீட்டை விட்டு வெளியேறியவள். தனது விருப்பப்படி நடனத்தைத் தொடர்ந்தவள். மிருதங்கம் வாசிக்கும் தன்னைவிட ஐந்து வயது இளைய இராசப்ப திருமணம் செய்து கொள்ளாமல் வாழ்பவள். பொது புத்தியில் பதிந்த 2 கட்டமைப்புகளைக் கடந்தவள்.

மன உறுதியின் உச்சம் காமும்மா என்றால், தற்போது மகளிடம் ஓர் பயணத்திற்காக மனம் இளகி வேண்டுகிறாள். பத்து வருடங்களுக்கு முன்னர் அன்றைய அரசாங்கம் கேட்டுக் கொண்டதற்கிணங்க எழுதிக் கொடுத்த நூறு பக்க அளவிலான தன் வாழ்க்கைச் சரித்தரப் புத்தகம். ஒரு புத்தகம் கூட தன்னிடம் இல்லை. தற்போதைய நிர்வாக இயக்குனர் காமும்மா வாழ்வில் முரண்பாடு கொண்டவர். அதனால் அப்புத்தகம் அழிக்கப்பட வாய்ப்பு உள்ளது என நினைத்துத் தவிக்கிறாள். உலகம் அறிய வேண்டிய பல உண்மைகள் மறைக்கப்படுவதற்காகவே முடக்கப்படுகின்றன. அவைகளை விழுங்கிய மலைப்பாம்புகளாகக் கிடங்குகள் இருகின்றன. மகளின் துணையுடன் டெல்லி கிடங்கிற்குச் செல்கிறாள். அதற்குள் தூசி தட்டி "**கற்றாவின் மனம்" என்ற தலைப்பிலான தனது புத்தகத்தினைக் கண்டு எடுக்கிறாள். வதைபடும் மிருகம் ஒன்றின் ஈனக் குரல் போல ஓசையிட்டுக் கிடங்கின் துருப்பிடித்த கதவு இறுக்கப் பூட்டிக் கொண்டதாகக் கதை முடிகின்றது. தனது மன உறுதியால் அனைத்தையும் எதிர்த்து நின்றவள், தன் காதலன் மீது அளவுகடந்த காதல் கொண்டவள், தன் முதுமையிலும் தனது புத்தகத்தினை மீட்பதற்காக மேற்கொண்ட பயணமாகக் கதை அமைகின்றது.**

**வீழ்தல்**

வீழ்தல் கதையின் நாயகி கமலா காலப்போராட்டத்தில் கணவனுக்குப் பக்கபலமாய் இருந்து குறைவிலும் நிறை கொண்டு வாழ்பவள். சிம்லாவின் மலை சூழ்ந்த ஹோட்டலில்

பன்னிரெண்டாம் மாடியின் பால்கனியில் நின்று கொண்டு அவள் வாழ்க்கைப் பயணத்தைத் திரும்பப் பார்க்கின்றாள். ஆண் என்றால் உறுதியானவன், மன வலிமை மிக்கவன் என்பது போன்ற பொதுபுத்தியின் திணிப்பை உதறித் தள்ளியவன் சத்யா. கமலாவின் கணவன் எழுபதுகளின் இடைப்பட்ட காலத்தில் இந்திரா காந்தி அவசர காலப் பிரகடனம் செய்த பின்னர் வந்த ஆண்டுகளில் ஏற்பட்ட தொழிலாளர்களின் வாழ்க்கை இடர்பாடுகளால் மனம் வருந்தி மடியில் படுத்து அழும் கணவனுக்கு ஆறுதல் கூறுகிறாள் கமலா. பம்பாயில் புதிய வாழ்க்கை தொடங்குகிறார்கள்.

ஐம்பது ஆண்டுகள் கடந்தாகிவிட்டது. உடம்பெல்லாம் இரப்பர் குழாய்களுடன் சத்யா, கமலா பயமா இருக்கு என்று அழுகிறான். அப்பொழுதும் அவனுக்கு வலிக்காமல் அவனை அணைத்துக் கொண்டு ஆறுதல் கூறுகிறாள். முழுவதும் சரியாகாது. 75 வயது காலாவதியாகும் வயது தான்... என்ற மருத்துவரின் வார்த்தைக்கு முரண்பட்ட கமலாவின் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை அவள் மகன் ஆதி. தொடர் சிகிச்சை முடிவுக்கு வர சத்யா இறக்கிறான். அவன் நினைவுகளோடு ஒரு மாதத்திற்குள் அனைத்துப் பொறுப்புகளையும் முடித்துவிட்டுத் தனக்கும் 72 வயதாகிறது. கலாவதி ஆகும் வயதுதான். **சத்யா தனியாக இருக்க பயப்படுவான். அவன் இருக்கும் இடம் செல்வதுதான் சரியென்று நின்று கொண்டிருந்த பால்கனியில் இருந்து வீழ்தல் அவளது வாழ்வின் இப்போதைய அதிமுக்கியமான சொல்லாக எண்ணி மேலிருந்து கீழே விழுந்தாள். எதிர்ப்பதில் மட்டுமல்ல... அன்புக் கணவன் பிரிதலிலும் மன உறுதியால் தன்னையே அழிக்கவும் தயங்காது பெண்மை என்பதாகக் கதாப்பாத்திரம் அமைந்துள்ளது.**

**சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை**

சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை கதையின் தலைவி மைதிலி. காதல் கணவனுக்காக எதையும் ஏற்றுக் கொள்பவள். பணி செய்யும் இடத்தில் கருத்து வேறுபாடு காரணமாகக் கணவன் வசந்தன் வேலையிழந்த பொழுது வாழ்வின் ஏற்ற இறக்கங்களைக் கணவன் கை பிடித்து ஏற்றுக் கொண்டவள். குழந்தைப்பேறு இல்லாததை எண்ணி வருந்தாதவள். கணவன் விருப்பதிற்காக சிகிச்சைகள் ஏற்றுக் கொண்டவள் மருத்துவமனையில் இருந்து வசந்த் ஒரு குழந்தையை எடுத்துவர அவன் விருப்பத்திற்காக ஏற்றுக் கொண்டு வளர்ப்பவள் வளர்ப்பு மகள் தேன்மொழிக்குக் காது கேட்பதில் குறைபாடு அறிந்து முறையான பயிற்சி தருகிறாள். சைகை மொழியை வசந்த் கடிந்து கொள்கிறான். தேன்மொழி சைகை மொழியில் பேசவே பெரிதும் விரும்புகிறாள். எட்வின் தன் வகுப்புத் தோழனுடன் சைகை மொழியில் பேச இயல்பாக எண்ணுகிறாள். கல்லூரிப் பருவத்திலும் எட்வின் வகுப்புத் தோழனாகத் தொடர்கிறான். காக்னியர் அறுவை சிகிச்சை குறித்துப் பேசிய வசந்த்க்கும் தேன்மொழிக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டில் குறிப்பு எழுதிவிட்டு வீட்டை விட்டுச் செல்கிறான் வசந்த்.

**பெரும் தேடலுக்குப் பின்னர் மைதிலி வசந்தனைக் காண்கிறாள். நேரில் பார்த்தும் அன்புக் கணவனின் முடிவில் தலையிடாது அனைத்தில் இருந்தும் ஏன்? என் காதலில் இருந்தும் உனக்கு சுதந்திரம் தருகிறேன் என்று எண்ணி அவனைக் காணாமலே விடை பெறுகிறாள். வாழ்க்கைத் துணை விரும்பும் வாழ்வை அவருக்கு வழங்குவதே உண்மையான அன்பின் குறியீடாக்கியவள் மைதிலி.**

**வில் முறியாத சுயம்வரங்கள்**

வில் முறியாத சுயம்வரங்கள் கதையின் நாயகி சாந்தி. இன்னும் இரண்டு மாதங்களில் கல்லூரிப் பேராசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெறப் போகிறாள். வெளிநாட்டில் இருந்து மகனும், மகளும், பேரக் குழந்தைகளும் ஸ்கைப்பில் அழைக்கும் நேரம் வந்துவிட்டது. பேச இருப்பதை எண்ணி மனம் மகிழ்கிறது. அனாதை ஆசிரமத்தில் வளர்ந்து பெரியவனாகிய பின்னரும் இறுதிவரை தன் தாய், தந்தையைக் காண வேண்டும் என்ற விருப்பத்தில் தோல்வி அடைந்து, மறதி தொற்றிக் கொள்ள இறுதி காலம் வரை தன் மனைவி சாந்தியுடன் மாறாத அன்புடன் இருந்தவன் அருண். கணவனின்

ISSN :
DOI :

மறைவிற்குப் பின்னர் தனிமையில், அப்பெண் ஸ்கைப்பில் குழந்தைகளுடன்.

அம்மாவின் தனிமையை மாற்ற சுயம்வர் என்ற திட்டத்தை அறிமுகம் செய்கின்றனர். சம வயது கொண்ட ஆண்கள் இருப்பார்கள். அவர்களோடு பழகி, பிடித்தால் திருமணம் செய்து கொள்ளலாம். அதற்கு முன்னர் சிக்கல் எதுவும் வராமல் இருக்க சொத்துக்களை மகன், மகள் பெயரில் மாற்றி எழுத வேண்டும். இது சரிபட்டு வரும் என்று எனக்குத் தோன்றவில்லை. எனக்குத் தெரிந்த நண்பன் இருக்கிறான். அவன் பெயர் நந்து. அவனோடு வாழ்ந்து தனிமையைத் தவிர்த்துக் கொள்வேன் என்ற சாந்தியின் பதில் அவளது குழந்தைகளுக்குப் பேரதிர்ச்சியைத் தந்தது. யாருடைய ஆலோசனையோ, அனுமதியோ? தேவையில்லை. அடுத்த வாரம் பேசலாம் என்று ஸ்கைப் தொடர்பைத் துண்டித்தாள். இதுவரை சிந்திக்காத ஒன்றைப் பற்றிப் பேசி, அது தன்னிச்சையாகத் தெளிவான உரு பெற்றதாக எண்ணினாள்.

வாயில் மணி அடிக்க, கதவைத் திறந்தால் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஆண். தன்னைத் தெரிகிறதா? என்ற கேள்வியுடன், நந்து நந்தகோபால் என்றார். சாந்தி முதுகலை படித்த பொழுது இளங்கலை படித்த, கவிதை பாடும் பாரதி நந்துவா?... என்றாள். எதார்த்தமாகத் தன் மகனிடம் கூறிய பெயர் தன் முன் வந்து நிற்பதை எண்ணி வியந்தாள். படிக்கும் பொழுது தன் மீதான காதலைக் கூறிய பொழுது தன்னைவிட இளையவன் என்று தட்டிக் கொடுத்துவிட்டுக் கடந்து சென்றிருந்தாள். இவள் நினைவாகவே முப்பத்து நான்கு வருடங்கள் காத்திருந்து யாரையும் மணந்து கொள்ளாமல், அவளது கணவன் இறப்பினை அறிந்து அதிலிருந்து அவள் வெளியேறப் போதிய கால அவகாசம் கொடுத்து இப்பொழுது அவள் அன்பைப் பெறுவதற்காக வந்துள்ளான்.

அருண் உயில், சாந்தி மீதான அவனது அன்பையும், பொருளாதார சுதந்திரம் வழங்கியிருந்தது. அருணின் நினைவை விலக்காமல், நதி கடலில் கலக்கும் போது பிற நதிகளையும் ஏற்றுக் கொள்வது போல அருணின் அன்பை ஏற்ற மனதோடு நந்த கோபாலுடன் பயணிப்பதும், உரையாடுவதுமாகத் தன் பொழுதைக் கழித்தால் சாந்தி.

**சொத்தினை எழுதி வாங்கிக் கொண்டு துணை தேடும் சுயம்வர் அமைப்பு அல்ல அவளுக்கான தேவை. எதார்த்த சூழலில் உறவுகளின் சிந்தனை அலைகளுக்குள் சிக்கிக் கொள்ளாமல் தெளிந்த தன் கணவனின் நினைவுகளோடு, நண்பனின் நட்பில் வாழ்க்கையைத் தொடங்குவதாகக் கதை நிறைவடைகிறது.**

**முடிவுரை:**

SPARROW –என்னும் பெண்கள் ஆவணக் காப்பகத்தை மும்பையில் 1988ல் நிறுவி அதில் செயல்பட்டு வரும் ஆசிரியர் அம்பை அவர்கள் தன் படைப்பில் பெண் கதாப்பாத்திரங்களை மிகச் சிறப்பாக வடிவமைத்துள்ளார். சாகித்ய விருது பெற்ற “சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை கதைத் தொகுப்பானது அனைத்து பெண்களும் படித்து உணர வேண்டிய கதாப்பாத்திரங்களின் ஆளுமைப் பண்புக் களமாகிறது. எல்லையற்ற நினைவலைகளுக்குள் மக்கள் மனம் உழல்வதையும், முதலாளித்துவத்திற்கு எதிரான சாதாரண பெண்ணின் மன எழுச்சியும், உறவுச் சிக்கலுக்குள் சிதையாமல் தம்மைக் காக்க முற்படும் சிந்தனைத் தெளிவும், வாழ்க்கைத் துணை விரும்பும் வாழ்வை அவருக்கு வழங்குவதே உண்மையான அன்பின் குறியீடாக்குவதும், அன்புக் கணவன் பிரிதலிலும் மன உறுதியால் தன்னையே அழித்துக் கொள்வதும், முதுமையிலும் தனது புத்தகத்தினை மீட்பதற்காக மேற்கொண்ட பயணத்தின் வழி மன உறுதியையும் என பெண்மையின் பல்வேறு மன நிலைகளை, பெண்களின் செயல்பாடுகளை, சமூகசூழல்களை எதிர்கொள்வதற்கான ஆற்றலைத் தன் கதாப்பாத்திரங்கள் வழி கூறியுள்ளார்.

**துணை நூற்பட்டியல்**

1.அம்பை, சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை, காலச்சுவடு, 2019.

Volume: 01 Issue -01:
January to March 2026

ISSN :
DOI :

# எஸ். ராமகிருஷ்ணன் சிறுகதைகளில் வாழ்வியல் சிந்தனைகள்

**த. பிரேமா, முனைவர் சு. சாந்தி**


## ஆய்வுச் சுருக்கம்

சிறுகதை என்பது வாழ்வின் ஒரு துளியை, ஒரு நிகழ்வை அல்லது ஒரு குறிப்பிட்ட உணர்வை, சுருக்கமாகவும் சுவாரசியமாகவும் சொல்லும் ஒரு இலக்கிய வடிவம். **"சிறுகதை என்பது ஒரு ஜன்னல் வழியாகப் பார்ப்பதைப் போன்றது. அது முழு உலகத்தையும் காட்டாது, ஆனால் ஒரு முக்கியமான காட்சியைத் தெளிவாகக் காட்டும்"** என்கிறார் நவீன எழுத்தாளர் சுஜாதா. 1 ("எழுத்துலகில் சுஜாதா") வாழ்வியல் சிந்தனை என்பது, "ஒரு மனிதன் தன் வாழ்க்கையை எப்படி அணுக வேண்டும், எப்படி வாழ வேண்டும்" என்பதற்கான வழிகாட்டும் நெறிமுறைகள் மற்றும் தத்துவங்களின் தொகுப்பாகும். நம் அன்றாட வாழ்க்கையில் நாம் எடுக்கும் முடிவுகள், பிறரிடம் காட்டும் அன்பு, துன்பங்களை எதிர்கொள்ளும் விதம் என அனைத்திலும் ஒரு வாழ்வியல் சிந்தனை வெளிப்படும். நவீன இலக்கிய எழுத்தாளரான எஸ். ராமகிருஷ்ணன், தன்னுடைய சிறுகதைகளில் இந்த வாழ்வியல் சிந்தனைகளை எவ்விதம் கையாண்டுள்ளார் என்பதை ஆய்வு செய்வதே இவ்வாய்வு கட்டுரையின் நோக்கமாகும்.



## திறவுச்சொற்கள்

தனிமனித வாழ்வியல் சிந்தனை - சமுதாய வாழ்வியல் சிந்தனை - குடும்ப வாழ்வியல் சிந்தனை – சூழலியல் வாழ்வியல் சிந்தனை - தத்துவார்த்த வாழ்வியல் சிந்தனை


**Date of submission : 20-04-2026 Date of acceptance : 24-04-2026**
**Date of Publication: 30-04-2026**
**Corresponding auther's Name :Dr.S. Shanthi**
**Email : shanthi.sl@vistas.ac.in**
**Pages : 24 - 28**

## முன்னுரை

ஒரு மனிதன் "எப்படி வாழ வேண்டும்" என்பதைத் தத்துவங்களாகக் கூறாமல், எளிய மனிதர்களின் கதைகளின் வழியே வாழ்ந்து காட்டிய நெறிகளின் தொகுப்பே தமிழ் இலக்கிய மரபாகும். சங்க காலம் தொடங்கி இன்று வரை இந்த மரபு தொடர்ந்து வருகிறது. நவீன இலக்கியத்தில், 'அவளது வீடு', 'கால்முளைத்த கதைகள்', 'தாவரங்களின் உரையாடல்', 'வெளியில் ஒருவன்' போன்ற எண்ணற்ற தொகுப்புகளின் மூலம் நவீன மனிதனின் வாழ்வியல் நெருக்கடிகளையும், அதிலிருந்து மீள்வதற்கான வழிகளையும் பேசியவர் எஸ். ராமகிருஷ்ணன் (எஸ்.ரா). இவரது கதைகள் வாழ்வின் மீதான அவநம்பிக்கையை விதைக்காமல், எவ்வளவு நெருக்கடிகள் இருந்தாலும் வாழ்வை அதன் போக்கில் கொண்டாடி நேசிக்க வேண்டும் என்ற நேர்மறை வாழ்வியல் சிந்தனையை முன்வைக்கின்றன. **"பூமி எவ்வளவு காய்ந்து கிடந்தாலும், ஒரு மழைத்துளி விழுந்ததும் புல் முளைத்துவிடுகிறது அல்லவா? மனித மனமும் அப்படித்தான். எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும், சிரிப்பையும் மனிதத்தையும் மட்டும் நாம் விட்டுவிடக் கூடாது. வாழ்வதே ஒரு பெரும் திருவிழா தான்." 2** வாழ்வியல் சிந்தனைகளை முக்கியமாக ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம்.

### 1. தனிமனித வாழ்வியல் சிந்தனைகள் :

எஸ். ராமகிருஷ்ணனின் 'அவளது வீடு' சிறுகதை, தனிமனித வாழ்வியல் சிந்தனைகளை குறிப்பாக ஒரு பெண்ணின் மனதையும், வீடு என்ற அமைப்பு அவளது தனித்துவத்தோடு எவ்வாறு பிணைக்கப்பட்டுள்ளது என்பதையும் பேசும் ஒரு நுட்பமான சிறுகதையாகும்.

**த. பிரேமா, முனைவர்பட்ட ஆய்வாளர்.**
முனைவர் சு. சாந்தி **உதவிப் பேராசிரியர்,**
**தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல், தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை - 600 117.**

Volume: 01 Issue -01:
January to March 2026
ISSN :
DOI :

**கதையின் நாயகி:**

இக்கதை ஒரு நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த 'அகல்யா' என்ற பெண்ணின் வாழ்வை மையமாகக் கொண்டது. சமூக விதிகளுக்கு உட்பட்டு, குடும்பம், கணவன், பிள்ளைகள் எனத் தன் வாழ்நாளை மற்றவர்களுக்காகவே செலவழிக்கும் ஒரு சராசரிப் பெண்தான் அகல்யா. ஆனால், அவளது மனம் தனக்கான ஒரு தனித்துவமான வீட்டிற்காக ஏங்கிக் கொண்டிருக்கிறது.

**சுய கட்டுப்பாடு:**

அகல்யா தனக்கென்று ஒரு வீட்டைக் கட்ட விரும்புகிறாள். அந்த வீடு அவளது ரசனைப்படியும், அவளது விருப்பப்படியும் மட்டுமே இருக்க வேண்டும் என்று நினைக்கிறாள். சமூகமும் குடும்பமும் அவளுக்குப் பல கடமைகளையும் எல்லைகளையும் விதித்தாலும், பேராசை, கோபம், பொறாமை போன்ற எதிர்மறை உணர்வுகளைக் கட்டுப்படுத்தி அவள் தன் மனதிற்குள் ஒரு 'தனித்த வீட்டை' உருவாக்கிக் கொள்கிறாள்.

**விடாமுயற்சியும் உழைப்பும் :**

அவள் தன் குடும்பத்தினரோடும், சுற்றியுள்ள மனிதர்களோடும் இயல்பாக வாழ்ந்தாலும், யாருக்காகவும் தன் விருப்பத்தை விட்டுக் கொடுக்க விரும்பவில்லை. அதற்காக விடாமுயற்சியோடு "வீடு வாடகைக்கு விடப்படும்" என்ற பலகையைக் கண்டவுடன் அங்கெல்லாம் அவளது வீட்டைத் தேடிச் செல்கிறாள். அவளை ஒரு சாதாரணக் குடும்பப் பெண்ணாகப் பார்த்தாலும், அவளது சிந்தனைகளும், அவளது வீடு சார்ந்த ரசனைகளும் மிக ஆழமானவை.

அகல்யாவை சுற்றியுள்ள மனிதர்கள் மற்றும் அவளது குடும்பம் அவளது அமைதியையும், அவளது உலகத்தையும் புரிந்து கொள்ளத் தவறுகிறார்கள். அவளது விருப்பங்கள் விசித்திரமானவையாக அவர்களுக்குத் தோன்றுகின்றன. ஆனால், அவளோ போலியான நற்பெயருக்காகவோ அல்லது பிறரின் பாராட்டுக்காகவோ தன் விருப்பங்களை மாற்றிக் கொள்ள மறுக்கிறாள்.

இறுதியில், 'அவளது வீடு' என்பது வெறும் செங்கற்களாலும் மணலாலும் கட்டப்பட்ட ஒரு கட்டிடம் அல்ல; அது அவளது சுயமரியாதை, தனிமை, மற்றும் நேர்மையின் அடையாளம் என்பதை இக்கதை உணர்த்துகிறது. **"சமையலறையின் புகையும் பாத்திரங்களின் சத்தம் அவளைச் சுற்றியிருந்தாலும், ஜன்னல் வழியே தெரியும் அந்த நீல வானம் அவளுக்கு மட்டுமே சொந்தமானது. அங்கு அவளுக்குக் கடமைகளும் இல்லை, எல்லைகளும் இல்லை. அது அவளது தனிமை; அவளது ஆத்மாவின் கானகம்." 3** சமூகம் பெண்ணுக்கு வழங்கும் பொதுவான அடையாளங்களைத் தாண்டி, அவள் தனக்கான உலகைத் தானே அமைத்துக் கொள்வதே இச்சிறுகதை காட்டும் வாழ்வியல் உண்மையாகும்.

**2. சமுதாய வாழ்வியல் சிந்தனை**

எஸ். ராமகிருஷ்ணனின் 'எம்பாவாய்' சிறுகதை, நடுத்தரக் குடும்பத்து முதிய பெண்மணியான 'நன்மதி'யின் வாழ்வை மையமாகக் கொண்டது. சமுதாயம் பெண்ணுக்கு விதித்துள்ள எல்லைகளையும், அதற்குள் அவள் தேடிக்கொள்ளும் விடுதலையையும், சமுதாய வாழ்வியல் சிந்தனைகளான சமத்துவம், தனிமனித சுதந்திரம் மற்றும் பெண் கல்வியின் முக்கியத்துவத்தை இக்கதை விளக்குகிறது.

**சமுதாயக் கட்டுப்பாடுகள்**

இந்த கதையின் நாயகி நன்மதிக்கு ஆறாம் வகுப்பு வரை மட்டுமே படிக்க அனுமதி கிடைக்கிறது. 15 வயதில் திருமணம், 17 வயதில் தாய்மை என அவளது உலகம் சுருங்கிவிடுகிறது. ஸ்ரீவில்லிபுத்தூரில் புகுந்த வீட்டிற்கு வரும் அவளுக்கு, "பெண்கள் தனியாக வெளியில் செல்லக்கூடாது", "பெண்கள் யாரும் நூலகத்திற்கு போக மாட்டாங்க" என்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. சமுதாயம் பெண்ணை வீட்டுக்குள்ளேயே முடக்கி வைக்கும் போக்கை இக்கதை காட்டுகிறது.

**விழிப்புணர்வு**

கணவருக்கு இலக்கியத்தில் ஈடுபாடு இல்லாத சூழலில், மைத்துனர் மற்றும் தன் மகன் மூலமாகப் புத்தகங்களை வரவழைத்துப் படிக்கிறாள். புகழ்பெற்ற எழுத்தாளர் 'வாகினி'யின் நாவல்கள் அவளுக்குப் வெளி உலகை அறிமுகப்படுத்துகின்றன. அவள் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்ட இடங்களை அவள் வாசிப்பின் வழியே அடைந்து கொள்கிறாள். **"அவள்**

**சமையலறைப் புகையிலிருந்தும் குடும்பத்தின் இரும்புப் பிடியிலிருந்தும் தப்பிக்கப் பழகியிருந்தாள். புத்தகங்களின் பக்கங்களுக்குள்ளும், இசையின் மெல்லிய சுவடுகளுக்குள்ளும் தன் சிறகுகளை ஒளித்து வைத்திருந்தாள். உலகம் அவளுக்கு விதித்த எல்லைகளை, அவள் தன் அறிவுத் தேடலால் மெல்ல அழித்துக்கொண்டே இருந்தாள்." 4**

**சமுதாய ஆதிக்கம்**

எழுத்தாளர் வாகினி, நன்மதியின் வீட்டிற்கு வந்து உணவருந்தி, அவளது பாடல்களை ரசித்து, அன்பின் அடையாளமாக ஒரு கைக்கடிகாரமும் கடிதமும் அனுப்புகிறாள். ஆனால், நன்மதியின் கணவரோ, "உனக்கு எதுக்குடி அவள் வாட்ச் பரிசாக அனுப்புறா?" என்று சீறி, கடிதத்தைக் கிழித்துப் போட்டு, கடிகாரத்தை வேலைக்காரப் பெண்ணிடம் கொடுத்துவிடுகிறார். பெண்ணுக்குக் கிடைக்கும் ஒரு சிறிய அங்கீகாரத்தைக் கூடப் பொறுத்துக்கொள்ள முடியாத சமுதாய மனநிலையை, கணவனின் வன்முறை குறியீடாக இந்தக் கதைக் காட்டுகிறது.

எஸ். ராமகிருஷ்ணனின் 'எம்பாவாய்' சிறுகதை, சமுதாயம் பெண்ணுக்குக் கற்பித்துள்ள 'அடிமைத்தனம்' என்ற வாழ்வியல் கசப்பை யதார்த்தமாகப் பேசுகிறது. "சமுதாயம் பெண்களை எவ்வளவுதான் ஒடுக்கினாலும், அவர்கள் தங்களின் தேடல்களின் வழியே தங்களின் வாழ்வியல் சிந்தனைகளை மீட்டெடுத்துக் கொள்கிறார்கள்" என்பதை இச்சிறுகதை மிக ஆழமாக உணர்த்துகிறது.

**3. குடும்ப வாழ்வியல் சிந்தனை**

எஸ். ராமகிருஷ்ணனின் 'நடுவில் உள்ளவள்' சிறுகதை, குடும்பத்தின் மையப்புள்ளியாக இருந்துகொண்டு அனைவரையும் தாங்கும் ஒரு பெண்ணின் அக உலகையும், அவளுக்குக் குடும்பம் வழங்கும் இடத்தையும் பேசுகிறது. இக்கதை இல்லற நெறி, விட்டுக் கொடுத்தல், கடமையுணர்வு போன்ற குடும்ப வாழ்வியல் சிந்தனைகளைப் பேசுகிறது. 'தனலட்சுமியின் துப்பாக்கி' என்னும் சிறுகதை, பயமும் ஏமாற்றமும் நிறைந்த ஒரு குடும்பச் சூழலில், 'தனலட்சுமி' என்ற சாதாரணப் பெண் தன்னுடைய பாதுகாப்பை அவளே உருவாக்கிக் கொள்கிறாள்.

**தியாக மனப்பான்மை**

"நடுவில் உள்ளவள்" சிறுகதையில் வரும் கதா நாயகி, மூத்தவர்களுக்கும் இளையவர்களுக்கும் இடையே, கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் இடையே, புகுந்த வீட்டிற்கும் பிறந்த வீட்டிற்கும் இடையே என தன்னுடைய வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் சகிப்புத்தன்மையோடு வாழ்கிறாள். குடும்பத்தில் உள்ள ஒவ்வொரும் ஒவ்வொரு விதமான குணம் கொண்டவர்கள். கணவனின் அதிகாரம், பிள்ளைகளின் எதிர்பார்ப்பு, மாமனார்-மாமியாரின் பழமைவாதம் எனப் பலதரப்பட்ட அழுத்தங்கள் அவள் மீது விழுகின்றன. அவள் தன்னுடைய விருப்பு வெறுப்புகளைக் கைவிட்டு, எல்லாவற்றையும் குடும்பத்திற்காகச் சகித்துக் கொள்கிறாள். இந்த 'விட்டுக் கொடுத்தல்' என்ற வாழ்வியல் பண்பு தான் குடும்பத்தை ஒட்டி வைத்திருக்கிறது.

**அங்கீகாரம்**

"நடுவில் உள்ளவள்" என்பதால் அவள் எப்போதும் மற்றவர்களின் நிழலிலேயே வாழ வேண்டியுள்ளது. அவளுக்கென்று ஒரு தனித்துவமான அடையாளம் அந்தக் குடும்ப அமைப்பிற்குள் கிடைப்பதில்லை. அவள் செய்யும் வேலைகள் அனைத்தும் இயல்பானவை என்று கருதப்படுகிறது.

**கடமையுணர்வு**

எவ்வளவு சோர்வடைந்தாலும், புறக்கணிக்கப்பட்டாலும் அவள் மீண்டும் தன் கடமைகளைச் செய்ய சமையலறைக்குள் நுழைகிறாள். இந்தத் தொடர் ஓட்டம், குடும்ப அமைப்பில் பெண்கள் கொண்டுள்ள ஆழமான தார்மீகப் பொறுப்புணர்ச்சியைக் காட்டுகிறது.

குடும்பம் தழைக்கப் பெண்ணின் தியாகமும், சகிப்புத்தன்மையும் அவசியம் தான்; ஆனால், அதே குடும்பம் அந்தப் பெண்ணை ஒரு தனிமனிதராக மதித்து, அவளது உணர்வுகளுக்கு அங்கீகாரம் வழங்க வேண்டும் என்ற மிக முக்கியமான வாழ்வியல் பாடத்தை இக்கதை சமுதாயத்திற்கு உணர்த்துகிறது.

**4. சூழலியல் வாழ்வியல் சிந்தனை**

எஸ். ராமகிருஷ்ணனின் 'பிடாரனின் மகள்' சிறுகதை, பாம்புகளோடு வாழும் பிடாரர் குலத்து

Volume: 01 Issue -01:
January to March 2026

ISSN :
DOI :

மனிதர்களின் வாழ்வியலையும், குறிப்பாக அவரது மகளின் சூழலியல் உணர்வுகளையும் விவரிக்கிறது.

**உயிரிரக்கம்**

பிடாரனின் மகள் பாம்புகளை வெறும் விஷ ஜந்துக்களாகவோ அல்லது பணம் சம்பாதிக்கும் பொருளாகவோ பார்க்கவில்லை. அவற்றுடன் ஒரு குடும்ப உறுப்பினரைப் போல, தன் தோழமையைப் போலப் பழகுகிறாள்.

**சூழலியல் அறிவு**

அவள் பாம்புகளை எப்படிக் கையாள்வது, அவற்றின் விஷத்தை எப்படி இறக்குவது, காடுகளின் வழிகளை எப்படி அறிவது போன்ற அரிய சூழலியல் அறிவைப் பெற்றிருக்கிறாள். ஆனால், அந்த அறிவை இயற்கையை அழிக்கப் பயன்படுத்துவதில்லை.

**இயற்கையோடு இணைந்த தொடர்பு**

எஸ். ராமகிருஷ்ணனின் 'பிடாரனின் மகள்' சிறுகதை, விளிம்பு நிலை மனிதர்களின் வாழ்வைச் சித்தரிப்பதோடு மட்டுமல்லாமல், மனிதக் குலத்திற்கான ஒரு மாபெரும் சூழலியல் பாடத்தையும் நமக்குக் கற்றுத் தருகிறது.

**5. தத்துவார்த்த வாழ்வியல் சிந்தனை**

எஸ். ராவின் 'வானோர்' சிறுகதை பௌத்த மதத்தின் கோட்பாடுகளையும், மானுட வாழ்வின் எதார்த்த துயரங்களையும் இணைத்துப் பேசும் ஒரு மிகச்சிறந்த தத்துவப் படைப்பாகும்.

**துயரத்தின் ஆற்றல்**

நூறு ஆண்டுகளுக்கும் மேலாக அந்த பிரமாண்ட வெண்கல மணி ஒலிக்கவில்லை. இரவு பகலாகப் பிரார்த்தனை செய்த புத்த பிக்குவின் வேண்டுதலாலும் அதை ஒலிக்க வைக்க முடியவில்லை.

**வன்முறையின் அவலம்**

இனத்தாலும் மொழியாலும் மனிதர்கள் பிரிக்கப்பட்டு, அப்பாவி மக்கள் கொல்லப்படும் அவலத்தை அந்தத் தாய் விவரிக்கிறாள். பாதி உடல் கருகிய குழந்தை என்பது வன்முறையின் கொடூர முகத்தையும், மனித குலம் தன் எதிர்காலத்தை தானே அழித்துக் கொண்டிருக்கிறது என்பதையும் காட்டும் தத்துவக் குறியீடாகும்

**கண்ணீரின் தத்துவம்**

கண்ணீர் மிகச் சிறிய துளியாக இருந்தாலும் அது எவ்வளவு இறுக்கமான மனதையும் கரைத்து மனதை இலகுவாக்கி விடும் ஆற்றல் மிக்கது. கண்ணீருக்கு மொழியோ, எல்லையோ கிடையாது. தத்துவ ரீதியாக, கண்ணீர் என்பது ஆன்மாவின் மொழி. சொற்கள் தோற்கும் இடத்தில், ஒரு மனிதனின் தூய்மையான கண்ணீர் இதயத்தையே உலுக்கிவிடும் ஆற்றல் கொண்டது. அதுவே அந்தப் பழமையான மணியை ஒலிக்கச் செய்தது.

**ஆன்மீகத்தின் நோக்கம்**

மணி சத்தம் கேட்டு மகிழ்ந்து ஓடிவந்த மக்களைப் பார்த்து அந்தத் தாய் சொல்கிறாள்: "உங்களை மகிழ்விப்பதற்காக இந்த மணி ஒலிக்கப்படவில்லை. எங்களின் துயரத்தை புரிந்து கொள்வதற்காக இந்த மணி ஒலித்திருக்கிறது.".

"பிறரது துயரத்தைக் கண்டு உருகாத எந்தவொரு ஆன்மீகமும், வழிபாடும் வெறும் அழுகிய ஓடே." **"ஆயிரம் விளக்குகள் ஏற்றி, கோடிக்கணக்கில் அபிஷேகம் செய்தாலும் என்ன பயன்? வாசலில் பசியோடு கிடக்கும் சக மனிதனைப் பார்க்காத கண், கருவறை தெய்வத்தை எப்படிக் காணும்? 5** தன் சுயநலம் கடந்து, போரினால் மடிந்த ஒட்டுமொத்த மக்களின் ஆன்மாக்களுக்காக ஒலித்த அந்தத் தாயின் குரலில்தான் புத்தரின் உண்மையான 'கருணைத் தத்துவம்' உயிர்த்தெழுந்து நிற்கிறது.

**முடிவுரை**

எஸ்.ராமகிருஷ்ணன் சிறுகதைகளில் வாழ்வியல் சிந்தனைகள் வாசிப்பவர்களுக்கு ஒருவிதமான மன அமைதியைத் தருகிறது. பெரிய மனிதர்களாகக் காட்டிக் கொள்பவர்களை விட, தெருவோரத்திலும், சிறிய வீடுகளிலும் வசிக்கும் எளிய மனிதர்களே இந்த உலகத்தைத் தாங்கிப் பிடிக்கும் அச்சாணிகள் என்பதை இக்கதைகள் மெய்ப்பிக்கின்றன. எளிய மனிதர்களின் வாழ்வை வெறும் வறுமையாகப் பார்க்காமல், அதை மகத்துவமாகப் பார்க்கும் ஒரு புதிய பார்வையை இக்கதைகள் நமக்கு அளிக்கின்றன.

**அடிக்குறிப்புகள்**

1. "எழுத்துலகில் சுஜாதா" கட்டுரைத் தொடர் - சுஜாதா

Volume: 01 Issue -01:
January to March 2026
ISSN :
DOI :

2. சிறுகதை: கோபல்ல கிராமம் (நூல்: ராஜநாராயணன் சிறுகதைகள்)
- கி. ராஜநாராயணன்
3. சிறுகதை: காட்டில் ஒரு மான் - அம்பை
4. சிறுகதை: வீட்டின் மூலையில் ஒரு சமையலறை (நூல் : 'அம்மா ஒரு கொலை செய்தாள்') – அம்பை
5. சிறுகதை: சூடிய பூ சூடற்க - நாஞ்சில் நாடன்
6. அவளது வீடு (தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகளின் தொகுப்பு )
- எஸ். ராமகிருஷ்ணன்

Volume: 01 Issue -01:
January to March 2026

ISSN :
DOI :

# செல்லாதபணம் நாவல் உணர்த்தும் பாத்திரங்களின் இயல்புகள்

**தா.பார்வதி, முனைவர் யு. துர்கா தேவி**

Date of submission : 20-04-2026 Date of acceptance : 24-04-2026
Date of Publication: 30-04-2026
Corresponding auther's Name :Dr.S.Priya
Email : spriya.sl@vistas.ac.in
Pages : 29 - 34

**ஆய்வுச் சுருக்கம்**

நல்ல அழகுடைய பொறியியல் படிப்பை முடித்தவுடன் கையில் வேலை கிடைக்கும் என்ற நிலையில் தன்னைவிட கல்வி, பொருளாதாரம், ஜாதி அனைத்திலும் குறைவாக உள்ள பர்மா அகதியான ஆட்டோக்கார ரவையைத் தவிர வேறு யாரையும் திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று பிடிவாதமாக நிற்கிறாள்.குடும்பத்தில் உள்ள யாருடைய சமாதானத்தையும் ஏற்காததால் வேறு வழியின்றி ரவியை அவளுக்குத் திருமணம் செய்து வைக்கின்றனர் ரேவதியின் குடும்பம்.

ஏழு ஆண்டுகள் கழித்து ரேவதி தீக்குளித்து விட்டாள் என்ற செய்தி ரவி அவளது தாய்க்குக் கைப்பேசி மூலம் தெரிவிக்கிறான். இது தற்கொலையா? கொலையா? அல்லது எதிர்பாராமல் நடந்த விபத்தா? இதற்கு காரணம் யார்? என்பது போன்ற பாத்திரங்களின் பல்வேறு அனுதாபங்களை இந்நாவல் விவரிக்கிறது. பாத்திரங்களின் பொருளாதாரம், சமூக தகுதிக்கு ஏற்ப அவர்களின் இயல்புகளும், உரையாடல்களும் அமைகின்றன. செல்லாதபணம் நாவல் உணர்த்தும் பாத்திரங்களின் இயல்புகள் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**திறவுச்சொற்கள்**

பாத்திரங்கள் - இயல்பு - ரேவதி -அமராவதி -ரவி நடேசன், முருகன்- பணம் - ஜாதி.

**முன்னுரை**

தலித்துகளின் வாழ்வை அவர்களது துயரங்களையும், எதிர்நீச்சலையும் மிகை படுத்தாமல், உணர்ச்சிப் பெருக்கின்றி இயல்பாக தனது படைப்புகளில் முன்வைப்பவர் இமையம்.

**"என் எழுத்தின் நோக்கம் மனித வாழ்வின் அத்தனை மேன்மைகளையும், இழிவுகளையும், இயற்கையின் முன் தோற்றுப் போகும்** [illegible] **தன்மையும் புரிந்து கொள்வதற்கான முயற்சியே."( கோவேறு கழுதைகள் )** இமையம் தலித் அல்லாத ஒரு குடும்பத்தின் துன்பத்தை மையமாக வைத்து "**செல்லாத பணம்**" என்ற நாவலைப் படைத்துள்ளார் 2018 ஆம் ஆண்டு வெளிவந்து, 2020 ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி விருது பெற்றது.

**ரேவதி**

சிறு வயது முதலே நல்ல படிப்பு,ஒழுக்கம் என்று வளர்ந்தவள் ரேவதி. **"காலேஜில் படித்து விட்டு வரும் வரை தங்கம் என்று பெயர் எடுத்த பெண்ணுக்கு வீட்டில் தங்கி இருந்த சில மாதங்களில் ஏன் புத்தி தடுமாறி போயிற்று"(செ. ப. 15)** என்று தாய் கூறுவதன் மூலம் அவள் ரவி மீது காதல் வயப்பட்டதை உணர முடிகிறது.தனது தந்தை, தாய், அண்ணன், தோழி எனப்பலரும் ரவி உனக்கு எந்த வகையில் பொருத்தமானவர்? என்ற கேள்விகளைத் தொடுக்க அதற்கான காரணத்தை சொல்லத் தெரியாத அவள் தீக்குளித்து மருத்துவமனையில் இருக்கும்போது அவனை ஏன் பிடித்ததற்கான காரணத்தை சொல்கிறாள்.

"**நெஞ்சிலயும் ரெண்டு கையிலயும் பச்ச குத்திக்கிட்டு வந்து காட்டுனது.பாக்குறப்பலாம் 'நீ என்னெக் கல்யாணம் கட்டிக்கலன்னா செத்திடுவன்'னு சொல்லிக் கைய பிளேடால கிழிச்சிக்கிட்டது.'ஐயோ பாவம்'ன்னு நெனச்சேன். (செ. ப. 57)**

**தா.பார்வதி, முனைவர்பட்ட ஆய்வாளர்.**
**முனைவர் யு. துர்கா தேவி உதவிப் பேராசிரியர்,**
**தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல், தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை - 600 117.**

Volume: 01 Issue -01:
January to March 2026
ISSN :
DOI :

ரவி வீட்டின் வறுமையையும், குடி நோயாலும் ரேவதிக்கு ஒரு நாள் கூட நிம்மதியான தூக்கம் வரவில்லை. தான் வேலைக்குச் சென்று சம்பாதித்தால் வீட்டின் வறுமை நிலைக் குறையும் என்று நினைக்கிறாள். '**வேலைக்கு அனுப்பாதடா. வேலக்கி போனா மதிக்க மாட்டா.பொட்டச்சி பணம் சம்பாரிச்ச ஆம்பளய எப்படி மதிப்பா?' (செ. ப. 158).** ரவியின் சந்தேகப் புத்தியாலும், தன் தாயின் தூண்டுதலாலும் ரேவதி வேலைக்கு செல்வதை தடுக்கிறான்.

ரவியின் ஆட்டோவுக்கு டியூ கட்டுவதற்காக பணத்திற்கு தன் தாய் வீட்டிற்குச் சென்று பண உதவி பெறுவதும், இதை தன் தந்தையும்,அண்ணனும் கண்டும் காணாமல் இருப்பது, இதற்கு இடையில் ரேவதி இரண்டு பிள்ளைகளுக்கும் அவளது தாய்பிரசவம் பார்த்து அனுப்புவது, ரவி குடிநோயால் சித்திரவதை அனுபவிப்பது போன்று இப்படியே நாட்கள் நகர்கின்றன. பின்னர் ஒருநாள் தீக்குளித்து மருத்துவமனையில் கிடக்கும் போது அவள் தன் தாயிடம். **"நடந்ததெல்லாம் ஆக்சிடண்டு. விட்டுத்தள்ளு. யாரயும் குத்தம் சொல்லாத. யாரையும் திட்டாதே. நான் வீட்டுக்கு வந்ததும் வேலக்கிப் போவணும். அவ்வளவுதான். அதுதான் எனக்கு இப்ப ஆச." (செ. ப. 59)**

குடும்பத்தினருடைய பாசத்தைப் புரிந்து கொள்ளாமல் தனது முடிவால் குடும்பத்தை துன்பத்துக்கு ஆளாக்கி விட்டோம் என்ற குற்ற உணர்ச்சியால் இவ்வாறு சொல்லும் ரேவதி இறக்கும் வரை ரவி மீது எந்த குற்றச்சாட்டை முன் வைக்கவில்லை.

ரேவதியின் குடும்பத்தினரும், அவர்களது உறவினர்களும், ரவி தான் ரேவதியைத் தீயிட்டுக் கொளுத்திருக்க வேண்டும் என்று நம்புகிறார்கள். ஆனால் ரவியோ அவளே எரித்துக் கொண்டாள் என்கிறான். ஆனால் ரேவதியோ காவல்துறை என்னிடம் வாக்குமூலம் கொடுக்கும் பொழுது,

" **மூன்று மணிக்கு நான் சமைத்துக் கொண்டிருந்தேன். அடுப்பில் குழம்பு கொதித்துக் கொண்டிருந்தது. நான் குழம்பைக்கிண்டி விட்டுக் கொண்டிருந்தேன். உப்பு பாட்டிலை எடுப்பதற்காக திரும்பிய போது தண்ணீர் மேடையிலிருந்த மண்ணெண்ணெய் கேன் சாய்ந்து குழம்பிலும்,அடுப்பிலும் கொட்டியதும் தீப்பிடித்துக் கொண்டது.என் கணவர் ஓடி வந்து என் மீது தண்ணீரை ஊற்றித் தீயை அணைத்தார்.நானும் கொளுத்திக் கொள்ளவில்லை. என் கணவரும் என்னைக் கொளுத்தவில்லை. தீ விபத்து எதிர்பாராத விதமாக நடந்தது. இதற்கு யாரும் காரணம் இல்லை. வாக்குமூலம் என் மனசாட்சியின் படி தான் கொடுத்தேன். யாரும் என்னை க்கட்டாயப்படுத்தவில்லை இப்படிக்கு"W/O ரவி, (செ. ப. 93)**

ரேவதி திருமண வாழ்க்கையின் மீது ஏற்பட்ட வெறுப்பின் காரணமாக தான் இறக்கும் நிலையிலும் கூட தனது கணவனையோ, கணவன் குடும்பத்தினரையோ, பார்க்காமல் தனது தந்தை, தாயும்,அண்ணனையும் காண விரும்புகிறாள்.

**அமராவதி**

அமராவதியே ரேவதியின் அம்மா இந்நாவல் முழுக்க ரேவதியின் மனநிலையையும், வலிகளையும் வெளிப்படுத்துகிறார் என்று கூறலாம். தன்மகள் அவள் தகுதிக்கும் குறைவான போக்கிரியை காதலிக்கிறாள் என்று ஆத்திரப்படுவதும், ரவியின் வீட்டிற்குச் சென்று அவளது அக்கா பிரியங்காவிடம், " **ஒன்னெ இந்த மாதிரி ஒரு பொறுக்கி பய வந்து ராவும் பகலும் தொந்தரவு செஞ்சா நீ என்ன செய்வா?." (செ. ப. 14)** என்று கேட்டாள். ரேவதி குடும்பத்தை விட்டு ஓடிப்போய் திருமணம் செய்து கொள்வாளா? இல்லை என்றால் வேறு திருமணம் செய்து வைத்தால் தன் உயிரை மாய்த்துக் கொள்வாளா? என்று தினந்தோறும் தன் மகளின் துயர நிலையைக் கண்டு கணவன் மற்றும் மகனிடம் ரவியை அவளுக்கு திருமணம் செய்து வைக்கும்படி கேட்கிறாள். அவர்களும் எதையாவது செய் என்று சொல்ல திருமணம் நடைபெறுகிறது.

"**கல்யாணம் நடந்த எட்டாவது மாதத்தில் அடித்து போட்டு விட்டான். நினைவு இல்லாமல் ரோட்டில் கிடக்கிறாள் என்று தெரிந்தவர்கள் சொன்னதால் அமராவதி போனாள். நினைவில்லாமல் கிடந்தவளை அழைத்துக் கொண்டு போய் மருத்துவமனையில்**

**சேர்த்தாள்.குடித்துவிட்டு வந்த ரவி "எம்பொண்டாட்டிய ஆஸ்பத்திரியில சேக்குறதுக்கு நீ யாரு.?" (செ. ப. 94)** என்று கேட்டுச் சண்டைக்கு வந்தான். மருத்துவமனையில் சேர்த்து வைத்தியம் பார்த்து வீட்டுக்கு அனுப்பிய பிறகுதான் அமராவதி இடம் ரேவதி போனில் பேச ஆரம்பித்தாள்.ரேவதிக்கு பணம்,பொருள் என்று கொடுக்க ஆரம்பித்தாள். அவள் கொடுப்பதில் பாதி நடேசனுக்கு தெரியும், பாதி தெரியாது.நடேசனிடம் பொய் சொல்ல ஆரம்பித்தாள்.

ரேவதிக்கு பணம் கொடுக்க வேண்டும் என்று சொல்லும் போது நடேசனும், முருகனும் 'எந்த எழவாவது எடு' என்று சொல்லிப் பணத்தைத் தூக்கி எறிவார்கள். வீம்பு பிடித்தால் காரியம் நடக்காதே என்று தூக்கி வீசிய பணத்தை பொறுக்கி எடுப்பாள்,தன்னுடைய மகளின் தேவைக்காக. இதற்கிடையில் அவள் கருத்தரித்த நாள் முதலே செலவு யாரு பார்ப்பது? என்று ரேவதி அடித்தான். இதைக் கேள்விப்பட்ட தாய் அமராவதி தன் மகளை மருத்துவமனையில் சேர்த்து இரண்டு குழந்தைகள் பிறந்து பிரசவம் பார்த்து தாய் வீட்டில் பத்து நாட்கள் தங்க வைத்து வீட்டிற்கு அனுப்பும் போது ஆளுக்கு ஒரு பவுன் நகைப் போடுகிறாள். ரவி அந்த நகைகளும் விற்றுவிட்டு ஆட்டோவில் டியூ கட்டுவதற்காக அமராவதி உதவியை நாடுகிறாள் ரேவதி." **எந்த கருமாதியா இருந்தாலும், நீயே பாத்துக்க. நீயே செஞ்சிக்க. எங்கிட்ட கொண்டு வராத."(செ. ப.10 )**என்று நடேசனும், முருகனும் ஒதுங்கிப் போனார்கள்.ஒரு நாளும் ரேவதி தன்னுடைய பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு வந்ததில்லை, ரவியும் வருவதில்லை, ரேவதி மட்டும்தான் அவள் வீட்டிற்கு செல்வாள்.

ரவி தனது சந்தேகப் புத்தியால் தான் ரேவதியை வேலைக்கு அனுப்பவில்லை. குடிக்காதே என்று சொன்னால் அடிப்பதும், நெறயா கத புஸ்தகம் படிப்பா. அவளுக்குன்னு அவ செஞ்சிக்கிற செலவு புஸ்தகம் வாங்குறது தான்.'**குடும்பம் நடத்த வந்தியா, புக்கு படிக்க வந்தியா'ன்னு கேட்டு அடிப்பான். (செ. ப. 49)** ஒரு பெண் கல்வி, சமூகம், பொருளாதாரம் என்று ஓங்கி உயர்ந்து நின்றாலும் தன் கணவன் என்ற ஒரே அதிகாரத்தைக் கொண்டு அந்த பெண்ணிற்கு மனதிலும், உணர்விலும் வன்முறையை செயல்படுத்துகிறான் என்பது புரிகிறது.

ரேவதி தீக்குளித்து விட்டாள் என்ற செய்தி வரும்போது அமராவதி ரவிதான் ரேவதியை தீயிட்டு கொளுத்தி இருக்க இருப்பான் என்று நிச்சயமாக நம்புகிறாள்.

**"அவன அவ விட மாட்டாங்க.பட்ட அடியும் ஒதயும் மறந்திடுமா? மூஞ்சிலியே காரித்துப்பனது, ஒங்கப்பனும், ஒங்கண்ணனும் புடுங்கிவானான்னு கேட்டது,குடிச்சிப்புட்டு நிதானமில்லாம வந்து 'வாயில சோத்த வையிடி'ன்னு எத்தனை முறை சொல்லியிருக்கான். வாயிலிருந்து சோத்த அப்படியே முகத்திலே துப்பிருக்கான். அடி ஒத வாங்கிக்கிட்டு எங்க போறதின்னு தெரியாம கோயில்லப் போயி ஒக்காந்து அழுதுட்டு வந்தாளே? பத்து நாளக்கு முன்னால நடந்த சண்டையிலே அடியயும் ஒதயும் வாங்கிக்கிட்டு, போறதுக்கு எடமில்லாம பஸ்ஸ்டாண்டு வர ரெண்டு தடவ சும்மாவே நடந்து போயிட்டு வந்தாளே அத மறந்திடுவாளா?"(செ. ப.22 )**

என நடந்த கொடுமைகளை ரேவதி நீதிபதியிடமும், காவலர்களிடமும் சொல்லி ரவியை சிக்க வைப்பாள் என்று அமராவதி சொல்கிறாள். இதைப்பற்றி நடேசனிடமோ,முருகனிடமோ சொன்னதில்லை என்று புலம்புகிறாள் அமராவதி.

ரேவதி தீக்குளித்ததற்கு யாரும் காரணமில்லை இது எதிர்பாராமல் நடந்த விபத்து என்று வாக்கமூலம் கொடுத்ததை ஏற்றுக் கொள்ள முடியாமல் அமராவதி பேசும் வார்த்தைகள்,**"இந்த நெலமயிலும் என்னெத் தலைகுனிய வச்சிட்டா. சாவட்டும். அவ சீக்கிரம் சாவறதுதான் நல்லது. ஆறு, ஏழு வருஷமாவா ஒருத்தி பெத்த தாயெக் கொல நடுங்க வைப்பா? என்னெப் போல புள்ள பெத்தவங்க ஒலகத்துல யாரும் இல்லெ. இந்த நெலமயிலயும் அவளுக்குப் புருசன் ஆச போவல பாரு.ரோட்டு பொறுக்கிக்கே இம்மாம் விஷம் காட்டிட்டா." (செ. ப. 95)**

அவள் பட்ட துன்பங்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை என்று புலம்புகிறாள். தீயில் வெந்துவிட்ட தன் மகள் ரேவதியை நினைத்து தன்னிலை மறந்து இருந்தவள் தான் அமராவதி.

**"ஆறு வருஷமா அவகிட்ட பேசல .'சாப்பிட்டியா?'ன்னு கேக்கல. 'நல்லாயிருக்கியா?'ன்னு கேக்கல, 'நான் பாத்துக்கிறேன் கவலப்படாம இரு'ன்னு சொல்லல. மொத்தமா மூணு, நாலு லட்சத்தக் கொடுத்திருந்தா ரெண்டு மூணு ஆட்டோவ வாங்கி ஓட்டியிருப்பான். பணம் இல்லன்னு சண்டை வந்திருக்காது. நான் அவளப் பத்தி பேச்ச எடுத்தப்பலாம் என் வாய மூடிக்கிட்டேன்.இப்ப எம்பொண்ணு செத்திருவாப் போல இருக்கே?" (செ. ப. 155)**

என்று ரேவதி இந்த நிலைமைக்கு தனது கணவனும், மகனும் ஒரு காரணம் என்று கூறுகிறாள் அமராவதி.

ரேவதி உடலை பிணவறையில் இருந்து கொண்டு வந்து அமரர் ஊரில் ஏற்றும் போது அமராவதி,

**"தூங்கிட்டியா அம்மா? தூங்கு. இனி ஒனக்கு எந்த தொந்தரவும் இல்ல. தப்பு செஞ்சிட்டோமேன்னு இனி நீ அழுவமாட்ட. எந்த நாயும் இனி ஒன்னை அடிக்க முடியாது.ஒதைக்க முடியாது. இனி அடிக்கு பயந்துக்கிட்டு எதுத்த வீடு, பக்கத்து வீடுன்னு நீ ஓடி ஒளிய வேண்டியதில்ல. அம்மாவுக்கு தெரிஞ்சிடுமோன்னு எதயும் நீ மனசில போட்டு மறக்க வேண்டியதில்ல. 'எங்கம்மாகிட்ட சொல்லிடாதிங்க'ன்னு யாருகிட்டேயும் கெஞ்ச வேண்டியதில்லை." (செ. ப. 214)**

அமராவதி தன் மகளுக்காக இறுதி வார்த்தையைச் சொல்கிறாள். பெண்ணாகப் பிறந்து தன் விருப்பப்படி செய்து கொண்ட திருமணத்தில் குடிகார கணவனும், கௌரவம் என்று பிரச்சனைகளைக் கண்டு ஒதுங்கி நடக்கும் அப்பா, அண்ணன் இதற்கிடையில் சிக்கி தவிக்கும் அம்மா என யாருக்கும் பயந்து ஒதுங்கி இனி ரேவதி வாழ வேண்டியதில்லை,என்னும் வார்த்தைகள் பெண்கள் உடலாலும், மனதாலும் சித்திரவதை செய்துக்கொண்டிருக்கும் ஆணினன் சமூகத்திற்கு ஏற்படும் பேரிழப்பாகும்.

**" இப்ப என் நெஞ்சு கடலப் போல குதிக்கல. நெருப்பப்போல எரியல. நீ தூங்கிட்டல்ல. அதனாலதான் என் நெஞ்சு அடங்கிப்போச்சி. ஒடம்பு குளந்து போச்சி. நான் எதுவும் செய்யல. என்னால எதுவும் செய்ய முடியல". (செ. ப. 215)**

இந்நாவலில் ரவி, நடேசன் முருகன் என அனைவரும் தன்னைவிட தன் குடும்ப கௌரவம் முக்கியமானது என்று கருதுகிறார்கள். இது ஒரு தாயின் மயான அமைதியை உணர்த்துகிறது. அமராவதிக்கு மானத்தை விட தன் மகள் ரேவதி தான் முக்கியம் என்று கருதியவள்.

**ரவி**

குடிகாரன், வம்புக்கு நிற்பவன், பெண்களை ஒரு பொருளாக மட்டுமே கருதுபவன் என்று இந்நாவல் முழுவதும் இவனது பாத்திரம் பேசப்படுகிறது. ரவியின் அக்கா அவனை விட இரண்டு வயது மூத்தவள் அவளுக்கு திருமணம் செய்து வைக்காமல் அவன் திருமணம் செய்து கொள்கிறான்.அவள் தாய் கோகிலா கூட ரவியை ஒழுக்கக்கேடானவன் என்று கூறுகிறாள். தனது அக்காவையோ, ஐந்து வயது மகளே நீங்கள் யாரையாவது காதலித்தால் கொன்று விடுவேன் என்று எச்சரிக்கிறான். ரவி ஆண் காதலித்து திருமணம் செய்தால் சரி என்று அதுவே தன் வீட்டுப் பெண் காதலித்தால் தவறு என்று சொல்வது ஆணின் ஆதிக்கத்தைக் காட்டுகிறது. ஒரு ஆணாக இருந்து தன்னுடைய குடும்பத்திற்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்யாமல், அதிகாரம் செலுத்துபவனாக விரும்புகிறான் என்பதை இந் நாவல் சுட்டிக்காட்டுகிறது.

ரேவதி தீக்குளித்து ஜிப்மர் மருத்துவமனையில் சேர்த்து பிறகு தன் நண்பருடன் இருக்கும் ரவி காவல்துறை தன்னைத் தேடுகிறதா? என்று கண்காணித்துக் கொண்டே

**"தாலி கட்டிக்கிட்டு வந்த ஒரு மாசத்திலியே என்னிக்கா இருந்தாலும் ஒன்னெ ஒரு நாளக்கி ஜெயிலுக்கு அனுப்பாம இருக்க மாட்டன்னு சொல்லிக்கிட்டேயிருந்தா அந்த முண்டச்சி. சொன்ன மாரியே இன்னிக்கே செஞ்சிடுவா போல இருக்கு."(செ. ப. 89)**

அவன் இவ்வாறு கூறுவதன் மூலம் ரேவதி செல்வாக்கு மிகுந்த குடும்பத்தையும், உறவினர்களையும், தூக்கி எறிந்து விட்டு வந்தவளை, அவள் எரிந்து வெந்து கிடக்கும் நிலையிலும், ரவி பற்றி எந்த குறையும் சொல்லாத நிலையிலும் அவன் இவ்வாறு குற்றம் சொல்கிறான்.

Volume: 01 Issue -01:
January to March 2026
ISSN :
DOI :

ஆணாதிக்க நோயும், குடிநோயும் சேர்த்து ஒருவனை எப்படி மாற்றுகிறது என்பதற்கு சான்றாக விளங்குகிறான் ரவி.

**“ சண்டையெல்லாம் அன்னிக்கு நடக்கல. நாலு நாளக்கி முன்னால அவங்கம்மா ஆட்டோவுக்கு டியூ கட்ட நாப்பதாயிரம் கொடுத்தாங்க. அதுல ஐநூறு எடுத்துக்கிட்டு சரக்கு சாப்பிட்டு வந்துட்டேன்.’எங்கம்மா டீயூ கட்டத்தானே பணம் கொடுத்தாங்க. அதுலயிருந்து எடுத்துக்கிட்டுப் போயி எதுக்கு குடிச்ச? நீ இதே மாதிரி செஞ்சிக்கிட்டேயிருந்தா நான் செத்திடுவன்’னு சொன்னா. நான் வெளயாட்டுக்கு ‘சரி. செத்துப்போ’ன்னு சொல்லிட்டேன். கொஞ்ச நேரம் கூட இருக்காதுக்ஷ எல்லாம் முடிஞ்சுப் போச்சி” (செ. ப. 159)**

என்று அழுதான். இது ரவிக்கும், ரேவதியின் அண்ணி அருண்மொழிக்கும் இடையில் நடந்த வாக்குவாதத்தில் ரவி கூறியது. ஆனால் அவன் காவல்துறையினரிடம் எழுதிக் கொடுக்கும் போது எதிர்பாராமல் நடந்த சம்பவம் என்று வழக்கறிஞரின் உதவியோடு எழுதித்தருகிறான்.

அருண்மொழிக்கும், ரவிக்கும் இடையே நடக்கும் வாக்குவாதத்தில் ரேவதி குடும்பத்தைக் குற்றம் சாட்டி தன் பக்கம் இருக்கும் நியாயத்தை எடுத்துக்காட்டி விளக்குகிறான்.

**“நீங்க எல்லாரும் பெரிய படிப்பு படிச்சவங்க. பெரிய வேலயில இருக்கிறவங்க. பணம் உள்ளவங்க. எல்லாம் இருக்கு ஒங்ககிட்ட. ஆனா பெரிய மனசு மட்டும் இல்ல.” “எங்கிட்ட பேசுனா என்ன, என்னெ அந்த வீட்ல விட்டா என்னா? எம் புள்ளைங்கிட்ட பேசுனா என்ன? இது தான் அவளுக்கு வருத்தமா இருந்துச்சி. அதனால தான் எல்லாரயும் நான் திட்டுவேன். அதனால்தான் எனக்கும் அவளுக்கும் தெனம் தெனம் சண்ட நடக்கும். நான் சல்லிப் பயதான் இல்லன்னு சொல்லல. சல்லிப் பய சல்லிப் பயலாத்தான் இருப்பான். ஆனா, பெரிய மனுசன் பெரிய மனுசனா இருக்கணுமா இல்லியா?”(செ. ப. 161)**

**“ நான் தெனம் அவ ஒடம்புல தான் அடிச்சேன் நீங்க மனசுல அடிச்சிங்க”**

**“ எங்கிட்ட பணம் இல்ல. ஒங்ககிட்ட இருந்துச்சி. அதனால நீங்க எம்மாம் அசிங்கப்படுத்தினாலும் ரேவதி ஒங்ககிட்ட வந்துகிட்டிருந்தா. பணத்தாலதான் அவ அசிங்கப்பட்டா. அவளுக்கு இனிமே அந்த அசிங்கம் இல்ல. இனிமே அவளுக்கு ஆட்டோக்காரன் பொண்டாட்டிங்கிற பேரு இல்ல,அசிங்கம் இல்ல.” (செ. ப. 163)**

என்று ரேவதி குடும்பத்தாரின் தவறுகளை தன்னுடைய புத்திசாலித்தனத்தால் சுட்டிக்காட்டுகிறான்.

**நடேசன்,முருகன்**

ரேவதியின் தந்தையான நடேசனுக்கு ரேவதியின் காதல் தெரிய வந்ததும் அவளுக்கு இது வேண்டாம் என்று எடுத்து சொல்லியும், தனது மனைவியின் மூலமாக காதலுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதும் நடக்கிறது.

ரேவதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது நடேசன் மருத்துவரிடம் கைப்பையில் வைத்திருந்த பணக்கட்டுகளை மேசை மீது வைத்தார்.

**“அட்மிஷன் ஆன உடனே ஒடம்பு சரியாகுமா?கொடுக்கிற மருந்தும் மாத்திரயும் வேல செய்யுறதுக்கு ஒரு டைம் வேணாமா?” என்று சொன்ன மருத்துவர் மேசை மீது இருந்த பணம், நகைகளைப் பார்த்த பிறகு என்ன தோன்றியதோ தளர்வான குரலில், “இந்த நிமிஷத்திலே இதுக்கெல்லாம் எந்த அர்த்தமும் இல்ல. இப்ப இந்தப் பணம் செல்லாது.”(செ. ப. 61)**

என்று சொல்லிவிட்டு வெளியே சென்றுவிட்டார்.

அமராவதி தன் மகள் ரேவதி இப்படி ஆனதற்கு தன் கணவன் நடேசன் ஒரு காரணம் என்று குற்றம் சாட்டுகிறாள் அமராவதி. அதைக்கேட்டு கடைசியில் நடேசன் சொன்ன வார்த்தைகள்

**“நான் கேட்டா. கண்டிச்சா நம்ப பொண்ணப் போட்டு அடிப்பான். ஒதைப்பான்னுதான் கேக்கல போலீசுக்கும் போவல. நான் இத்தினி வருசமா ஒதுங்கிப் போனதுக்குக் காரணம் எம்பொண்ணு தொந்தரவு இல்லாம இருக்கணும், உசுரோட இருக்கணும்தான். நான் ஒண்ணுச் சொல்ல, அவன் ஒண்ணுச் சொல்ல பேச்சு முத்திப்போயி அசிங்கமாயிட்டா, ஒங்கிட்ட பேசறதும் நின்னு போயிடும். நீ கொடுக்கிற காசும் இல்லன்னா இன்னும் கஷ்டப்படுவான்னு தான் விலகிப் போனேன். எனக்கும் அவனுக்கும்**

Volume: 01 Issue -01:
January to March 2026

ISSN :
DOI :

**சண்டையாயிட்டா நம்ப அப்பாவ அசிங்கப் படுத்திட்டானேன்னு அவ பெரிய சண்டையாப் போட்டு, அதனால அவன் அதிகமாக அடிப்பானேன்னு ஒதுங்கிப் போனேன்." (செ. ப. 66)**

என்று சொன்ன நடேசனுக்கு அதற்கு மேல் பேச முடியவில்லை. கண்களில் கண்ணீர் நிறைந்து விட்டது. தலையை கவிழ்த்துக் கொண்டார்.

முருகன் தன் தங்கை ரேவதி ஏன் வாக்குமூலத்தை மாற்றி கொடுத்தால் என்பதை கேட்டே தீரவேண்டும் தீர்க்கமான மனநிலையில் இருந்தான். ஆனால் தன் தங்கை ரேவதியை பார்த்ததும் அவளது நிலையை எண்ணி கதறுகிறான்.

"**அவளைப் பார்த்த நொடியே கருகிப் போய்விட்டான். அதற்காக அவளிடம் கோபப்பட முடியவில்லை. பேச முயன்றான். வாய் திறக்கவில்லை.பேச்சு வரவில்லை. அழுகை தான் வந்தது."(செ. ப. 111)**

ரேவதியின் இறுதி ஊர்வலம் அமைதியாக நடைபெற வேண்டும் என்பதற்காக ரவி வீட்டிற்கு ரேவதி உடலை கொண்டு செல்ல அனுமதிக்கிறான். உறவினர்கள் ரவி மீது ஏன் புகார் கொடுக்கவில்லை? என்று கேள்விகளுக்கு பதில் சொல்லும் மனநிலையோ முருகனுக்கும், நடேசனுக்கும் இல்லாமல் இருந்தது.

**முடிவுரை**

செல்லாத பணம் வாசிப்பவர்களுக்கு தீக்குளித்து தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் வராது.அவர்களின் குடும்பம் படும் துன்பங்களும், மருத்துவமனை,காவல்துறை நடைமுறைகள், நோயாளிகளை பார்க்க வரும் பார்வையாளர்களின் அர்த்தமற்ற கேள்விகள், மருத்துவர், செவிலியர்களின் சிக்கல்கள் ஆகியவற்றை உணர்த்துகிறது, தன் ஆசிரியருக்கு உதவுவதற்காக கட்சி வேறுபாடின்றி ஒன்றிணையும் அரசியல்வாதிகள் போன்றோர் எவ்வித பிரதிபலனும் பாராமல் ரேவதி குடும்பத்திற்கு உதவி செய்யக்கூடிய மனநிலையை எடுத்துக்காட்டுகிறது. இமையத்தின் புனைவுகள் கதாபாத்திரங்களின் உரையாடல்கள், அவர்களின் எண்ணத்தின் ஓட்டங்கள், எழுத்தாளனின் வர்ணனை என்று மொழியாடல்களின் அமைந்துள்ளது.ஆண்மைய சமூகமாக தொடர்ந்துக் கொண்டிருக்கும் நம் சமூகத்தில் பெண்களின் நிலை, உணர்வுகள், வலிகள் பற்றிய ஆவணமாக இந்த நாவல் சமூகத்தை பிரதிபலிக்கிறது என்பதை கட்டுரை மூலம் அறியலாம்.

---

**துணைநூற் பட்டியல்**

**இமையம் - செல்லாத பணம்** - கிரியா பதிப்பகம், சென்னை 2018.

Volume: 01 Issue -01:
January to March 2026

ISSN :
DOI :

# திருமுருகாற்றுப்படையில் முருக வழிபாடு

**முனைவர்.க.கமலா,**

**Date of submission : 20-04-2026 Date of acceptance : 24-04-2026**
**Date of Publication: 30-04-2026**
**Corresponding auther's Name :Dr.S.Priya**
**Email : spriya.sl@vistas.ac.in**
**Pages : 35 - 37**

## முன்னுரை

முருகப் பெருமானது ஆறுபடை வீடுகளுள் திருப்பரங்குன்றம், திருஏரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை ஆகிய திருத்தலங்களில் முருகப்பெருமானைச் சூரரமகளிர், பேய்மகளிர், அந்தணர், மக்கள் வணங்கி வழிபாடியற்றிய முறைகளைத் திருமுருகாற்றுப்படை பதிவுசெய்து ஆவணப்படுத்தியிருக்கிறது அவ்வழி பாட்டுமுறைகளையும் அவற்றில் காணப்பெறும் சிறப்புக் கூறுகளையும் வெளிக்கொணரும் நோக்கில் இக்கட்டுரைஅமைகிறது

1. திருப்பரங்குன்றம் திருப்பரங்குன்றத்தில் இயற்கையான அழகுடைய சூரரமகளிர், பல்வேறு அணிகலன்களை அணிந்து, தங்களை ஒப்பனை செய்து கொண்டு, விளாமரத்தின் சிறிய தளிரைக் கிள்ளி, முருகனை நினைந்து, ஒருவர் மேல் ஒருவர் அத்தளிர் படும்படி விரலால் தெளிக்க, அவை தம் உடலில் பட்டபோது, "அசுரர்களை வென்று, அவர்களைக் கொன்றொழித்து, அவ்வெற்றிக் குறித்துத் தூக்கிய கோழிக் கொடி வாழியபெரிது" என்று வாழ்த்திப் பலரும் ஒன்றாகக் கூடி, மலை இடமெல்லாம் எதிரொலிக்க ஆடிப்பாடினர் என்பதை,

**"கோழி ஓங்கிய வென்றுஅடு விறற்கொடி**
**வாழிய பெரிது! என்றுஏத்தி, பலர்உடன்**
**சீர்திகழ் சிலம்புஅகம் சிலம்பப் பாடி**
**சூரா மகளிர் ஆடும் சோலை**

எனும்அடிகள்உணர்த்துகின்றன.

**பேய்மகளிரின்துணங்கைக்கூத்து**

துணங்கைக் கூத்து என்பது முடக்கிய கைகளையும் விலாப்புடைகளில் ஏற்றியடித்துக் கொண்டு அசைந்தாடும் ஒருவகைக் கூத்து ஆகும் (தமிழ்ப் பேரகராதி தொகுதி 4. ப. 1963)

திவாகர நிகண்டு இதனை,

**"பழுப்புடைஇருகைமுடக்கியடிக்கத்**
**துடக்கிய நடையது துணங்கையாகும்"**
**(தி.நிகண்டு 9 )**

என்று கூறுகிறது இக்கூத்து 'சிங்கிக் கூத்து எனவும் குறிப்பிடப்படுகிறது.

**"கொன்றுதோளோச்சியவென்றாடுதுணங்கை**
**(பதிற்று. 77)**

என்றும் துணங்கையில் ஈடுபாடு கொண்ட கொற்றவையை துணங்கையர் செல்வி என்றும் பதிற்றுப்பத்து அடிகள் குறிப்பிடுகின்றன மன்னர்களும் துணங்கைக் கூத்திற் முதலிடம் தந்தனர் 'தலைக்கை தருதல் என்ற குறிப்பும் காணப்படுகிறது. திருவிழா, போர், வெற்றி முதல் காலங்களில் ஆடப்படுகிறது மகளிர் ஆடவரைத் தழுவியாடுவது என்று மதுரைக்காஞ்சியும் இதனைக் குறிப்பிடுகின்றது. இக்கூத்தினை,

**"மகளிர் தழீஇய துணங்கையானும்" (குறுந் 37**
**என்று குறுந்தொகையும்,**
**"கலிகெழு துணங்கை ஆடிய மருங்கின்"(பதிற் 13)**
**என்று பதிற்றுப்பத்தும் கூறுகின்றன.**

அழகெல்லாம் திரண்டு நின்ற கோலமுடைய குராமகளிர்க்கு, நேர் முரணான அழகின் மையெலாம் திரண்டு நின்ற கோலமுடைய பேய் மகளானவள் முருகனையும். வெற்றி மிக்க போர்க் களத்தையும் பாடி, துணங்கைக் கூத்தாடுகின்றாள்.

**முனைவர்.க.கமலா பேராசிரியர்,**
**தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல், தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம்,**
**சென்னை - 600 117.**

முருகன் அசுரரைக் கொன்றழித்த போர்க்களத்தில் பேய் மகள் கண்டார் அஞ்சும் **கோர உருவத்துடன், இறந்த உடலின் தலையைத் தன் பெரியகையில் ஏந்திக் கொண்டும்** அதிலுள்ள கண்களைத் தோண்டி உண்டும், அசுரர்கட்டு அச்சம் தோன்றும் வகையில், வெற்றி மிக்க அப்போர்க்களத்தைத் தன் நிணம் தின்னும் வாயினால் பாடியும், தன் தோளை அசைத்தும் துணங்கைக் கூத்தாடி முருகனை வழிபடுகிறாள் (திருமுருகு 52:55)

**2. திருஏரகம்**

**அந்தணர் வழிபாடு**

அந்தணர் என்போர். ஓதல் முதலிய அறுவகைத் தொழில்களை வழுவாமல் செய்பவர்கள்; உலகத்தார் மதிக்கின்ற பல்வேறு பழங்குடிப் பிறப்புடையவர்கள்; நாற்பத்தெட்டு ஆண்டுகள் தம் இளமைக் காலம் முழுவதும் வேதம் கூறும் வழியில் பிரமசரியத்தைக் கைக்கொண்டவர்கள்; ஆகவனீயம், தட்சிணாக்கினி, காருகபத்தியம் என்ற மூன்று வகைத் தீயால் உண்டாகிய செல்வத்தை உடையவர்கள் பூணூற் சடங்கிற்கு முன் ஒரு பிறப்பும். அதன் பின் ஒரு பிறப்பும் ஆகிய இரு பிறப்பினை உடையவர்கள் இத்தகைய இயல்புகளைக் கொண்ட அந்தணர்கள். தாங்கள் வழி படவேண்டிய உதயகாலம், மத்தியானகாலம், அத்தமன காலம் எனும் முக்காலமும் அறிந்து, பூணூலையும், நீர் உலராத ஈர ஆடையை அணிந்து கொண்டும், தலை மேல் குவித்த கையினராய் முருகப்பெருமானைப் போற்றிப் புகழ்ந்து துதிக்கின்றனர் (திருமுருகு 177-185)

ஆறு எழுத்துக்களைக் கொண்ட, பெறுதற்கு அருமையான 'சரவணபவ எனும் வேதமந்திரத்தை நாக்கு மட்டும் அசையும் அளவில் பயிலும் படி பல முறை ஒலிக்கின்றனர். பின்னர், நறுமண மிக்க மலர்களை எடுத்துத் தூவி வழிபடுகின்றனர் முருகப்பெருமான் அதற்கு மிகவும் மகிழ்ந்து திருஏரகம் எனும் தலத்தின் கண் எழுந்தருளுகிறான் (திருமுருகு.186-189) என்பதனை,

ஆறு எழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாஇயல் மருங்கில் நவிலப்பாடி, விரைஉறு நறுமல ர்ஏற்றி

**எனும் அடிகள் உணர்த்துகின்றன.**

**குன்றுதோறாடல்குரவைக்கூத்து**

**குரவை என்பது ஒருவகைக் கூத்தாகும் இந்து எழுவரேனும், எண்மரேனும்,** ஒன்பதின்மரேனும் கைகோர்த்து ஆடும் கூத்து என்பர் வரிக் கூத்துள் ஓர் உறுப்பென்றும், வினோதக் கூத்து ஆறனுள் ஒன்று என்றும் கூறுவர். இக்கூத்து தமிழகத்தில் பண்டைக் காலத்தில் பெருங்செல்வாக்குப் பெற்றிருந்தது. இலக்கியங்களில் இக்கூத்துதான் மிகுதியாக வரும் கூத்துஎனலாம்.

முல்லை அல்லது குறிஞ்சி நிலமக்கள் தம்முள் கைகோர்த்தாடும் கூத்துவகை (தமிழ்ப் பேரகராதி, தொகுதி 2. ப 1012) என்று தமிழ்ப் பேரகராதியும், அழகிய தாளக் கட்டிற்கு ஏற்ப ஆடும் கூத்து என்று மதுரைக்காஞ்சியும் கூறுகின்றன.

போர்க்களத்தில் வாகை சூடியவீரர்கள் வெற்றிவிழாக் கொண்டாடுகின்றனர். பாணரும் கூத்தரும் தமது ஆடல்பாடல்களாலும் இன்னிசைக் கருவிகளாலும் வீரர்களை மகிழ்விக்கின்றனர் அரசனும் வெற்றிக் களிப்பில் தன்னை மறந்து வீரர்களுடன் குரவைக் கூத்தாடுகின்றான் (பதிற் 56) இதனால் மன்னரையும் மயங்கி ஆடச் செய்வது குரவைக் கூத்து என அறிய முடிகிறது. வெற்றியைக் கொண்டாடும் மகிழ்வில் தோன்றிய களிப்புத்துள்ளலே நாளடைவில் குரவைக்கூத்தாக வளர்ந்திருக்கலாம்.

முருகனைப் பூசை செய்யும் வேலன், பச்சிலைக் கொடியால் சாதிக்காயை இடையிடையே சேர்த்து, அதனோடு, தக்கோலக் காயையும் கலந்து, காட்டு மல்லிகையுடன் வெண்டாளிப்பூவையும் சேர்த்துக் கட்டிய தலைமாலையை உடையவன் வேலன் இவ்வாறு நிற்க குறவர்கள் தம் மார்பில் நல்ல நறுமணம் மிக்க சந்தனத்தைப் பூசிக்கொண்டும், நீண்ட மூங்கிற் குழாயில் தேனைப் பெய்து முதிர் வித்துச் சமைத்த கள்ளின் தெளிவைத் தம் சுற்றத்தாருடன் உண்டு மகிழ்ந்து, தங்கள் குறிஞ்சி நிலத்திற்குரிய 'தொண்டகம் எனும் சிறிய வாத்தியத்தை அடித்து, அதனது தாளத்திற்கு ஏற்பக் குரவைக் கூத்தை ஆடுகின்றனர். அதனைக் கண்டுகளிக்க

Volume: 01 Issue -01:
January to March 2026
ISSN :
DOI :

முருகப்பெருமான் எழுந்தருளுகின்றான் (திருமுருகு 190-197) என்பதை,
“குன்றகச் சிறுகுடிக்கிளையுடன் மகிழ்ந்து, தொண்டகச் சிறுபறைக் குரவைஅயர"
(திருமுருகு. 196-197) எனும்அடிகள் இயம்புகின்றன.

**4. பழமுதிர்சோலை**

வெறியயர் களன் என்பது, வேலன், முருகப்பெருமானுக்குக் களனிழைத்து, வெறியாட்டயரும் இடம் ஆகும். பண்டைக்கால மக்கள் தமக்கு உடல்நலம் இல்லாத வழியோ, பிறகுறைகள் உண்டான போதோ, வேலன் கட்டுவிச்சி முதலியோரிடத்துக் குறிகேட்டல் வழக்கம்: அவர் 'இக்குறைதெய்வத்தான் நேர்ந்தது என்று கூறினாலும் அல்லது தெய்வத்திற்கு வெறியாட்டு அயர்ந்தால் தாம் உற்றதுயர் நீங்கும் என்று கருதினாலும், எதிர்காலத்தே நிகழப் போவதனை முன்னரே அறிந்து கொள்ள விரும்பினாலும், அவ்வழி முருகப்பெருமானுக்கு வேலனைக் கொண்டு களன் இழைத்து, சிறிய தினை அரிசியைப் பூக்களோடு கலந்து, மறியறுத்து, மலர் சிதறி நறுமணப்புகை, சந்தனம் முதலியன கொடுத்து, வழிபாடுசெய்வர். அங்ஙனம் செய்யுங்கால், முருகப்பெருமான், அவ்வேலன் மேல் எழுந்தருளி ஆவணக் கூறி அவர் குறையைப் போக்குவது வழக்கமாகும் (திருமுருகு 218-226)

**முடிவுரை**

திருப்பரங்குன்றத்தில் சூரர மகளிர் விளவின்தளிரை ஒருவர் மீது ஒருவர் தெளித்து, கோழிக் கொடியை வாழ்த்தி, ஆடிப் பாடியதையும், பேய்மகளிர் துணங்கைக் கூத்தாடி வழிபாடியற்றியதையும், திருஏரகத்தில் அந்தணர் ஈரம் உலராத ஆடையுடன் 'சரவணபவ மந்திரத்தைப் பலமுறை ஓதி வழி பாடியற்றியதையும், குன்றுதோறாடலில் வேலன்தன் சுற்றத்தினருடன் குரவைக் கூத்தாடி வழிபட்டதையும், பழமுதிர் சோலையில் வேலன் வெறியாட்டயர்ந்து, மறியறுத்து, மலர் சிதறி வழிபட்டதையும் திருமுருகாற்றுப்படை பதிவு செய்து ஆவணப்படுத்தியிருக்கிறது.

--------------------------------------

Volume: 01 Issue -01:
January to March 2026

ISSN :
DOI :

# கே பாலச்சந்தர் திரைப்படத்தில் பெண் ஆளுமை

சு. கனகவேல்பாண்டி முனைவர் க. கமலா

Date of submission : 20-04-2026 Date of acceptance : 24-04-2026
Date of Publication: 30-04-2026
Corresponding auther's Name :Dr.S.Priya
Email : spriya.sl@vistas.ac.in
Pages : 38 - 40

**முன்னுரை**

"ஆளுமை" என்பது தன்னைத்தானே ஆள்வதும், பிறரை ஆளும் வல்லமை கொண்டிருப்பதும் "ஆளுமை" எனப்படும் இடத்திற்கும், சூழலுக்கும் ஏற்ப ஒருவர் நடந்து கொள்ளும் பண்பே "ஆளுமை" எனப்படும் இந்தப் பண்பு பிறவியிலேயே வளர ஆரம்பிக்கிறது எங்கேயும் எப்போதும் எந்த விசயத்திற்கும் சரியான தொரு தீர்வை அமைப்பதும், இத்தீர்ப்பை அனைவரும் ஏற்கும் வண்ணம் செய்து முடிக்கும் திறமையும் "ஆளுமை" ஆகும் தன்னம்பிக்கையையும், தலைமைப்பண்பும் கொண்டிருப்பது" ஆளுமைக்கு முக்கிய ப் பண்பாகும்.

**பெண் ஆளுமைத் திறன் :**

ஆண் ஆதிக்கம் நிறைந்த உலகில் பெண்களுக்கு ஆளுமை வளர்ச்சி என்பது மிக அவசியமான ஒன்றாகும். பெண்கள் கல்வி அறிவும் பல்வகைத்திறன்களும் கொண்டு விளங்க வேண்டும். பெர்சினாலிட்டி டெவலப்மெண்ட் எனப்படும் ஆளுமைத்திறன் ஆண்-பெண்பாகுபாடின்றி அமையவேண்டும் நடை, உடை, தோற்றப் பொலிவு, மற்ற நபர்களை அணுகும் விதம், நாகரீகமாக நடந்து கொள்ளும் விதம் என பெண்கள் தங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் பெண் தன்னையும், தன் பலன்களையும் உணரும்போது தான், பெண் விடுதலை சாத்தியமாகிறது என்பதை ஜெயந்தி சாம்சன் என்பவர் "தேடல் வலி" என்னும் கவிதையில் "பெண்ணே உன்னை நீயே உணராத வரையில் எதற்குமே நீ உரிமை கொள்ள முடியாது." எடுத்துக் காட்டுகிறார் இன்றைய சூழலில் பெண்களுக்கு கல்வி தன்னம்பிக்கையை ஏற்படுத்தி இருக்கிறது தன் பலம் உணர்ந்து நிலையில் விழிப்புணர்வுற்ற பெண்ணின் குரலாய் ஒலிக்கின்றன ஏட்டினை பெண்கள் தொடுவது பாவம் என்ற நிலை மாறி பெண்கள் கல்வி கற்று பல துறைகளில் முன்னேறியுள்ளார் உலகில் பல கல்பனா சாவ்லா க்கள் வளர்ந்து வருகின்றனர்.இன்று அத்துனைத்துறைகளிலும் பெண்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்த தாகக் கருதப்படுகிறது பெண்கள் படித்து பட்டம் பெற்று தன் சீரிய அறிவாற்றலால் உலகை ஆளும் வல்லமை மிக்கவர்களாக முன்னேறியுள்ளனர்

கே பாலச்சந்தர் திரைப்படத்தில் பெண் ஆளுமை:

கே பாலச்சந்தர் என்பவர் தமிழ்த்திரைப்பட இயக்குனர் ஆவார். இவர் மேடை நாடகத் துறையில் இருந்து திரைத்துறைக்கு வந்தவர். 1987-ஆம்ஆண்டுஇந்திய அரசால் பத்மசிறீ பட்டம் வழங்கப்பட்டது. 2011-ல் தாதாசாகெப் பால்கே விருது வழங்கப்பட்டது. 2005-ல்சத்தியபாமா பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது 1995-ல் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. எம். ஜி. ஆர் விருது, கலைஞர் விருது என திரைத்துறையில் பல விருதுகளை வென்றுள்ளார். திரைத்துறையில் பல புதுமைகளைப் படைத்தார். அந்தந்த காலகட்டத்தில் சமுதாயத்திற்கு எது தேவையோ அதனை மையமாகக் கொண்டு திரைக்கதை அமைப்பதில் வல்லவர். தமிழ் சினிமாத்துறையின் பிதா மகனாகப் போற்றப்பட்டவர் இயக்குனர் சிகரம் கே பாலச்சந்தர் ஆவார்.

**சு. கனகவேல்பாண்டி முனைவர்பட்டஆய்வாளர்.**
**முனைவர்.க.கமலா பேராசிரியர்,**
**தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல், தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம்,**
**சென்னை - 600 117.**

பெரும்பாலும் பெண்ணியம் சார்ந்தவை. தமிழ்த்திரைப்படத்தில் பெண்கள் பிரச்சனைகளை அடிப்படையாக வைத்து அதிகப் படங்களை உருவாக்கியவர் என்ற பெருமைக்குரிய இயக்குனரும் இவரே.

சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் அடக்குமுறைகளையும், கொடுமைகளையும் எதிர்த்து நிற்கும் போர்க்குணம் பெண்களுக்கு வேண்டும் என்பதை தன் திரைப்படங்கள் வாயிலாக சமுதாயத்திற்கு பெண் விடுதலை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தியவர்.

தன் திரைப்படத்தில் பெண்களை ஆண்களின் போகப் பொருளாகக்காட்டாமல், வீரமிக்க, எழுச்சி மிக்க கதைமாந்தர்களாகப் படைத்திருப்பார். பெண்களுக்கு என்று ஓர் இதயம் இருக்கிறது, உணர்ச்சி இருக்கிறது, வாழ்க்கைக்கான தேடல் இருக்கிறது என்பதை சமூகத்திற்கு திரையிட்டுக் காட்டியவர். இயக்குனர் கே. பாலச்சந்தர்

கே பாலச்சந்தர் இயக்கத்தில் வெளிவந்த "அவள் ஒரு தொடர்கதை" திரைப்படத்தில்,கதாநாயகி குடும்பத்திற்காக உழைத்து, உழைத்து திருமணம் கூட செய்து கொள்ளாமல் சுமைதாங்கியாக வாழ்ந்து வருகிறாள். பிறர் நலனுக்காக தன்னை இயந்திர பாக்கி கொண்டு உழைக்கும் பெண்களின் உள்ளக்குமறள்களை திரையிட்டுக் காட்டிய இருப்பார். "அரங்கேற்றம்" - எனும் திரைப்படத்தின் கதாநாயகி குடும்ப வறுமையை போக்குவதற்காகவும், தன் உடன்பிறந்தோரின் ஆசைகளை நிறைவேற்றுவதற்காகவும் அலுவலகத்தில் வேலைக்குச் செல்கிறாள். அங்கே அவளின் மேலதிகாரியால் பாலியல் கொடுமைக்கு ஆளாகிறாள் பின் விலைமாதர் ஆகிறாள் இவளின் இந்த நிலையை அறிந்த இவளின் குடும்பம் அவளை வெறுத்து ஒதுக்குகிறது. பின் கதாநாயகி மனநோயாளி ஆகிறாள். அக்காலக்கட்டத்தில் இத்திரைப்படம் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

"அவர்கள்"திரைப்படத்தில் தாலி கட்டியதால் மட்டுமே தன்னை அடிமையாக்கி, அணு அளவும் இரக்கமின்றி, தினமும் தன்னைக் குத்திக் காட்டி குறை கூறும் கணவனை தூக்கியெறிந்து விட்டு, அவன் கட்டிய தாலியை உண்டியலில் போட்டுச்செல்லும் புதுமைப் பெண்ணாகப் படைத்திருப்பார் இயக்குனர். " மூன்று முடிச்சு " என்ற திரைப்படத்தில் தன் காதலனைக் கொன்றவனை பழிவாங்கும் பொருட்டு அவனுடைய தந்தையை மணந்து அவனுக்கு சித்தியாக வந்து அதிர்ச்சி தரும் பெண்ணாக செல்வி என்ற கதாப்பாத்திரத்தைப் படைத்திருப்பார்

பெண்ணியம் சார்ந்த இயக்குனரின் திரைப்பட வரிசையில் உச்சம் தொட்ட திரைப்படம்"அக்னி சாட்சி " என்ற திரைப்படமாகும் இத்திரைப்படத்தில் கண்ணம்மா என்னும் கதாப்பாத்திரம் இன்றளவும் பெண்கள் மத்தியில் பெண்ணியம் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தும் திரைப்படமாக அக்காலகட்டத்தில் பேசப்பட்டு வந்தது. மற்ற திரைப்படத்தில் உள்ள பெண் கதாபாத்திரங்களுக்கு துணிச்சல், பெண்ணுரிமை சார்ந்த விழிப்புணர்வு, சமுகக்கோபம் போன்ற குணாதிசயங்கள் இருந்தன. ஆனால்"அக்னி சாட்சி " - வரும் கண்ணம்மா பிரத்யேகமானவள்.

கூர்மையான நுண்ணறிவும், கலை ரசனையும், கவிதைத்திறனும் கொண்டவள். ஆணாதிக்க கொடுமை களில் பல நூற்றாண்டுகளாக சிக்கித் தவிக்கும் பெண் குலத்தின் முக்கியப்படைப்பு எனலாம். பெண்கள் தங்களின் மனக் குமறல்களை வெளியே சொல்லாமல் மெல்ல, மெல்ல மனநோயாளியாக மாறி விடுகிறார்கள். தன் மனக்குமறல்களை மனதினுள் மறைத்து வைக்காமல் ஒரு பெண் ஆவேசமாக வெளிப்படுத்தனால் எப்படி இருக்கும் என்பதை "அக்னி சாட்சி" கண்ணம்மா கதாபாத்திரத்தை படைத்துள்ளார்

"அக்னி சாட்சி"-திரைப்படம் பெண்கள் மட்டுமின்றி ஆண்களும் அவசியம் காண வேண்டிய ஒரு திரைப்படமாக அமைந்தது பெண்களின் மனங்களைப் புரிந்து கொண்டு, ஆண்கள் பெண்களை அரவணைத்துச் செல்லவேண்டும் என்ற கருத்தினை சமுதாயத்திற்குஎடுத்துக்கூறும் விதமாக அமைந்துள்ளது.

"கல்யாண அகதிகள்" என்ற திரைப்படத்தில் ஏழு பெண்கள் திருமணத்திற்கு பிறகு வரதட்சிணைக் கொடுமையால் அவர்கள் பட்ட இன்னல்களை விளக்கும் படமாகவும், அதிலிருந்து அவர்கள்

Volume: 01 Issue -01:
January to March 2026
ISSN :
DOI :

விடுபட்டு ஆண் துணையின்றி பெண்கள் வாழ முடியும் என்பதைக் காட்டும் திரைப்படமாகவும் அமைந்துள்ளது.

முடிவுரை:

தமிழ்த்திரையுலகில் பெண்களைப் பற்றியும், பெண்களின் பிரச்சனைகள் குறித்தும் ஒரு சகோதரனாய், ஒரு தந்தையாய் தன் திரைப்படங்கள் வாயிலாக சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டி, பெண்ணியம் பேசியவர் இயக்குனர் கே. பாலச்சந்தர் அவர்கள். இன்று பெரிதாக விவாதங்களுக்கு உள்ளாகும் பெண்ணியம் சார்ந்த விஷயங்களை 1980_களிலேயே பெண்களின் உள்ளத்து உணர்வுகளையும், அவர்களின் , சமூக கோபங்களையும் திரையில் வெளியிட்டு வெற்றி கண்டவர்**.**

----------------------------------